1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு ஆவணி மாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 30-ம் இலக்கம்




## காலநிலை

மப்புமந்தாரம் அதிகமாகக் காணப்படுகின்றது. மாலைவேளையிலே குளிர் சாற்று இன்னுமே வீசிக்கொண்டுவருகிறது. கடந்த சிலவாரங்களிலே இரண்டொருமுறை சிறுபாட்டம்மழை பெய்தபோதிலும் குளங்கள், கிணறுகள் வற்றிக்கொண்டேயிருக்கின்றன. மூன்றுநாட்குளிர்சுரம் இன்னும் சிலவிடங்களில் தலைகாட்டிக்கொண்டேயிருக்கிறது.

## பிரதமரின் பாராட்டுரை

அவிசாவலையைச்சேர்ந்த உறுகலை எனுமிடத்திலே பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் சென்றசனிக்கிழமை ஓர் நெசவுதொழிற் பாடசாலைக்கு அத்திபாரக்கல்நாட்டும் வைபவத்தில் பேசியபோது: இந்நாட்டிலே கத்தோலிக்ககுருமார் கல்வியின் முன்னேற்றத்துக்கும், கிராமங்களின் நிலைமைகளைத் திருத்துவதற்குமாகச் செய்துள்ளவைகளுக்காக அவர்களைப் பெரிதும் பாராட்டலாயினர். தாம நாடு முழுவதும் சுற்றிப் பிரயாணஞ்செய்திருப்பதாகவும், இங்கே அத்துணை உழைப்பும், முயற்சியுமுள்ள கிராமம் ஒன்று இருப்பதை அறியவந்தது தமக்குச் சந்தோஷமென்பதாகவும் அவர் தெரிவித்து, அந்தக்கிராமத்தைஉழைப்பும், முயற்சியுமுடையதாகச்செய்தகத்தோலிக்க குருமாரின் அயராமுயற்சிக்காக அவர்களுக்கு நன்றிதெரிவித்தார். அத்தருணம் உறுகலை விசாரணைப்குருவர் வண. யகான்கனி சுவாமியார் பேசியவிடத்து: சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் சர்வதேச பிரஸ்தாபம் பெற்ற ஓர்பெரிய மனுஷனென்றும், அவருடைய முயற்சியால் இலங்கை மக்கள் சமாதானத்தைக் கண்டடைந்திருக்கிறார்களென்றும் பகரலாயினர்.

## சிகறேற் புகையிலைச்செய்கை

அடுத்தபுகையிலைச்செய்கைக் காலத்திலே யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதிலும் 200 ஏக்கர்காணியில் சிகறெற் புகையிலைச்செய்கை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதனால், யாழ்ப்பாணத்திலும் புகையிலைகொள்வனவுசெய்யும் நிலையம் ஒன்றை அமைக்க இலங்கைப் புகையிலைக்கம்பெனி தீர்மானித்திருக்கிறது. இதுகாலவரை யாழ்ப்பாணத்தில் செய்கைபண்ணப்பட்ட சிகறெற்புகையிலை கண்டியிலுள்ள அக்கம்பெனியின் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு வந்தது. இப்போதுயாழ்ப்பாணத்திலே சிகறெற் புகையிலை செய்கைபண்ணுகிறவர்களின் வசதியைக்கோரி இங்கும் ஓர் கொள்வனவுநிலையத்தைஅமைக்கக் கம்பெனி தீர்மானித்துள்ளது. இலங்கையிலே சிகறெற்புகையிலைசெய்யும் முக்கியமான இடங்களில் யாழ்ப்பாணமும் ஒன்றாகக்கூடுமென்று இதுவரைநடத்திய பரிசோதனைகளிலிருந்து கண்டறியப்பட்டிருக்கிறது.

## மருதமடு ஆவணித்திருநாள்

மருதமடுத்திருப்பதியிலே நிகழும் ஆவணிமாதம் 15-ந்திகதி கொண்டாடப்படவிருக்கும் மாதாவின்மோட்சாரோபணத் திருநாளை முன்னிட்டு றெயில்வேமார்க்கமாக மூன்றும்வகுப்பிலே அங்குசெல்லும் திருயாத்திரிகர்களுக்குப் போகவர ஒற்றைச்சலாரிலும், அதிற்பாதியிலும் மலிவுதிக்கெற்றுகள்வழங்க றெயில்வே அதிகாரிகள் ஒழுங்கு செய்திருக்கின்றனர். மடுறோட்டிலிருந்து ஐம்பதுமைல் தூரத்திலும், அதற்கப்பாலுமுள்ள ஸ்றேஷன்களிலெல்லாம் இந்தமலிவுதிக்கெற்றுகள் இம்மாதம் 8-ந்திகதிமுதல் 15-ந்திகதிமுடிகிறவரையிலே வழங்கப்படும். பின்னர்இவைகள் இம்மாதம் 17-ந்திகதிவரைசெலலும். இன்னும் றெயில்வேப் பிரயாணத்துடன் இணைத்து மடுறோட்டிலிருந்து திருப்பதிவரையிற் செல்லப் பஸ்சலார் வளர்ந்தவர்களுக்கு 50 சதமும், பிள்ளைகளுக்கு 25 சதமுமாகும். பத்துப்பேர் அல்லது அதற்கு மேறபட்ட தொகையினர் ஒன்று சேர்ந்து ஓர்கூட்டமாகச் செல்லுமிடத்துப் பதினேழுநாட்களில் திரும்பக்கூடியதாக ஒற்றைச்சலாரிலும், அதில் காற்பங்கிலுமமலிவுதிக்கெற்றுகள்வழங்கப்படும். இவர்கள் "வர்த்தக அதிகாரி, இலங்கை அரசாங்க றெயில்வே, கொழும்பு 10" என்ற விலாசத்துக்கு மனுச்செய்துகொள்ள வேண்டும்.

## மற்றோர் புதிய லோஞ்ச்

"செறுவா" என்ற கடற்படைப் புதியலோஞ்ச்ஒன்று தற்போது ஊர்காவற்றுறைக்கு வந்திருக்கிறது. 30 கடல்மைல்வேகத்தில் செல்லக்கூடிய இந்தலோஞ்ச் வடகடல்களில் களவிலே சாமான்களை ஏற்றுமதி இறக்குமதிசெய்கிறவர்களையும், களவிலே குடியேறவருகிறவர்களையும் கண்டுபிடிப்பதில் ஊர்காவற்றுறையிலுள்ள கடற்படையினர்நடத்தும போராட்டத்திற்குப்பெருதவியாகும். இம்மாதத்திலே மற்றும்இரண்டு லோஞ்சுகள் வந்து சேர்ந்ததும் ஊர்காவற்றுறைக் கடற்படையினர் எல்லாமாக ஐந்துலோஞ்சுகளைக் கொண்டிருப்பர். அங்கு ஹம்மன்ஹில் கோட்டைக்குவடக்கே காரைநகர்க் கடற்கரைநீளம் கட்டப்பட்டுவரும் கடற்படைப்புதிய கட்டடமும் ஏறக்குறைய பூர்த்தியடைகின்றது.

## வண. லோங்சுவாமியார்

கண்வைத்தியஞ் செய்விக்குமாறு யாழ்ப்பாணம் வந்திருந்த வண. ரி. எம். எவ். லோங்சுவாமியார் சென்றவியாழக்கிழமைகாலை கொழும்பிலிருந்து ஆகாயவிமானமார்க்கமாய் ஆஸ்திறேலியாவுக்குச் சென்றிருக்கின்றார்.

## நுவரேலிநகரசபையின் தீர்மானம்

நுவரெலி நகரசபையின் மாதாந்த கூட்டம் அண்மையில் நடந்தபோது, அதிலே நுவரெலியிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரியில் தற்போது இருந்து வருகின்ற நேர்ஸ்மாருடன் கன்னியாஸ்திரீமாரான நேர்ஸ்மார்சிலரையும் நியமனஞ்செய்ய வேண்டுமென்று சுகாதாரமந்திரியாரைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று ஏகமனதாக நிறைவேறியுள்ளது.

## றெயில்வேச் சலார்விகிதம்

றெயில்வேச் சலார்விகிதங்கள் மீளவும் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன. அதனால், சாமான்களின் ஏற்றுமதி, இறக்குமதிச்சலார் குறைக்கப்படுமென்றும், மூன்றுமவகுப்புகளுக்கும் பிரயாணச் சலார் திருத்தப்படுமென்றும் தெரியவருகிறது. புதியசலார்விகிதங்களை நிர்ணயிக்குமுன், றெயில்வே அதிகாரிகள் பிரித்தானிய றெயில்வே நிபுணர்களின் உதவியைத் தேடவிருக்கிறார்கள். இந்தநிபுணர்கள் இம்மாத நடுக்கூற்றில் இங்குவந்து சேருவார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

## நீதியாசரும் ஆங்கிலமொழியும்

யாழ்ப்பாண உயர்தரக்கல்விக் கழகநிதி உதவிக்கெனச் சென்றவெள்ளிக்கிழமை இரவு ஆரம்பிக்கப்பட்ட ஆவணிமாதக் களியாட்டப் பொருட்காட்சியைத் தற்போது யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணை நடத்திவருகின்ற நீதியாசர் ஈ. எவ். என். கிறேஷன் அவர்கள் திறந்துவைத்துப் பேசியபோது: "இங்கே நான் எதையும ஆட்சேபிக்கும் நோக்கத்துடன்வரவில்லை; ...... நாம் இராத்தஞ்சிந்தாது சுதந்திரம்பெற்றோம்; இப்போதுஆங்கிலத்தை வெளியேற்றிவிட முயல்கிறோம்; ஆனால், உலகம்முழுதிலும் பேசப்படும் இந்தஆங்கிலமொழி நம்முடையமொழியுமாகும்; அநேக வருடங்களின்முன் பிரித்தானியிலிருந்துபிரிந்த அமெரிக்ககுடியேற்ற நாடுகள் பிரித்தானியரை வெளியேற்றினவேயன்றி அவர்களின் ஆங்கிலமொழியை வெளியேற்றிவிடவில்லை; நமதுநாடு 80 லட்சம்பேரைக் கொண்ட ஓர்சிறியநாடு; உலகில் நமக்குரிய அந்தஸ்தை அடைய வேண்டுமானால் அதற்கு ஆங்கிலம்அவசியமாகு" மெனக் கூறலாயினர்.

## பிரதமரின் பெருங்கவலை

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் கண்டிநகரிலே சென்றஞாயிற்றுக்கிழமை அளிக்கப்பெற்ற பெரியவரவேற்பின்போது பேசுகையில், ருஷியா அல்லது செஞ்சீனாவின் 'கமின்போம்' அழைப்பைஏற்று எம்நாட்டுயுவர்கள் அங்குசெல்வது பெருங்கவலையளிப்பதாய் இருக்கிறது; இலவசப்பிரயாணம், சாப்பாடு ஆதியவற்றிலே இளைஞர்கள் ஆசைகொள்ளுகிறார்கள்; இலவசமாகக் கிடைப்பதாயிருந்தால் அவர்கள் தலைவலியைத்தானும் ஏற்பார்கள்போல் இருக்கிறதெனக்கூறி இம்மாதிரியான இலவசப் பிரயாணங்களால் எமது சிறிய ஜனநாயகநாட்டுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களைப்பற்றி எச்சரிக்கை செய்தார்.

## தொழிற்சாலை விபத்துகள்

இலங்கையிலுள்ள தொழிற்சாலைகளிலே நிகழும் விபத்துகளின்தொகை வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. சென்ற வருடம் தொழிற்சாலைகளில் 2,500 விபத்துகள் வரை நிகழ்ந்துள்ளன. அதற்குமுந்திய வருடம் 2,065 விபத்துகளே நிகழ்ந்தன. அரசாங்க தொழிற்பகுதியிலே எல்லாமாக 3,525 தொழிற்சாலைகள் பதிவுசெய்யப் பட்டுள்ளன. விபத்துகள்நேராமல் தடுக்குஞ் சட்டவிதிகளைக் கண்டிப்பாக அனுசரித்திருப்பின் இவற்றிலே எத்தனையோவிபத்துகள் நிகழ்ந்திராவென்று சொல்லப்படுகிறது.

## ஆசிரியர் எஸ். எவ். சந்தியாப்பிள்ளை

சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்களில்ஒருவரான திரு. எஸ். எவ். சந்தியாப்பிள்ளை அவர்கள் தாம் பெற்றுக்கொண்ட வித்தியாவெகுமதியின் பேரிலே ஐக்கியஅமெரிக்க தேசத்தில் பகிரங்க நூல்நிலைய நிர்வாகத்தில் தமது ஐந்துமாதகாலப் பயிற்சியைச் சித்திகரமாக முடித்துக்கொண்டு சென்றவெள்ளிக்கிழமை சேமமே யாழ்ப்பாணம் வந்து சேரலாயினர். இவர் வாஷிங்ரன், போஸ்ரன், கிளீவ்லண்ட்முதலாம் நகர்களிலுள்ள கல்லூரிகள், பகிரங்க நூல்நிலையங்களிலே நூல்நிலையக் கலைபயின்று, அத்தேசத்திலுள்ள ஒரு பெருந்தொகையான பகிரங்கநூல்நிலையங்களைத்தரிசித்து, பிலடெல்பியாநகரில் நிகழ்ந்த அமெரிக்கநூல்நிலையசங்கமகாநாட்டுக்குச் சமுகமளித்து, பகிரங்கநூல்நிலைய நிர்வாக பயிற்சியைச் சித்திகரமாக முடித்த காரணமாக நூல்நிலையக்கலையிலே "டிப்ளோமா" பெற்றுக்கொண்டு இலங்கைக்குத் திரும்பும்வழியிலே ஆயர்லாந்து, இங்கிலாந்து முதலாம்நாடுகளையும், றோமை நகரையும் தரிசித்திருக்கின்றார். இங்கிலாந்திலே இவர் தங்கியிருந்தபோது பிறிஸ்ரல், குளஸ்றர், ஸ்றுற்போட்-அபோன் - அவோன், ஒக்ஸ்போட், லண்டன்முதலாம் நகர்களிலுள்ள பகிரங்க நூல்நிலையங்களைப் பார்வையிடும் சந்தர்ப்பத்தைக் கண்டுகொள்ளலாயினர்.

## கைத்தறி வாரம்

கைத்தறி நெசவுதொழிலை விருத்திசெய்யும் நோக்கமாகவும், நெசவுதொழிலாளரின் பொருளாதார நிலையை அதிகரிக்கச்செய்யும் நோக்கமாகவும் யாழ்ப்பாணத்திலே கைத்தறிநெசவு துணிகள் அணியும் தேசியவாரம் ஒன்றைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை வடமாகாண அரசாங்கதலைவரான திரு. எம். ஸ்ரீ காந்தா அவர்கள் செய்திருக்கின்றார். அவர் இதுசம்பந்தமாய் வெளியிட்டுள்ள சுற்றறிக்கைஒன்றிலே ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கிராம முன்னேற்றசங்கம், ஐக்கிய பண்டகசாலை, குடிசைக்கைத்தொழில் ஸ்தாபனம் ஆகியனவற்றின்மூலம் கைத்தறிநெசவுதுணிகள் விற்பனைசெய்யப்படுமெனத் தெரிவித்திருக்கின்றார். இந்தக்கைத்தறி நெசவுவாரம் அடுத்த தீபாவளிகாலத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

---

"இனிமேல்யுத்தம்வராது; வரக்கூடாது; இதுவே ஜெனிவாப்பேச்சுகளின் நோக்கம்; உலகவிவகாரங்கள் ஓர்நெருக்கடியான பகுதியைக்கடந்து யுத்தத்திலிருந்து சமாதான பாதைக்குத் திரும்பியிருக்கிறது; உலகமக்கள் அனைவரும் சமாதானத்தைவிரும்புவதால் எந்தஅரசாங்கமும் மக்களின் விருப்பத்தை எதிர்த்துநிற்கமுடியாது" என்று "பிராவ்தா" என்ற ருஷிய கம்யூனிஸ்தகட்சிப் பத்திரிகை சென்ற 1-ந் திகதியன்று முழக்கஞ்செய்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கமாய்த் திகழ்ந்த
# தாயாரின் இருதயம்

( தமிழாக்கம்: ஆசிரியர் எல். பாக்கியநாதர் )

(முன்தொடர்ச்சி)

அடுத்தநாளும் அந்தநான்குபிள்ளைகளும் ஜில்பேட்டை அழைத்துச் சென்றனர். ஜில்பேட்வந்ததும், ஐந்து பேருமாகக்கூடி அதே காட்சியைக் காண விரும்பினர். அன்றைக்கும் அதேகாட்சிதான். ஆனால், அதே இடத்தில்அல்ல. கன்னியர்மடத்துத் தோட்டத்தில். அத்தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த லூர்துமாதா குகைக்குச் சமீபத்தில் அந்தக்காட்சி காணப்பட்டது.

இந்தக்காட்சி அவர்களுக்குச் சற்றே தெளிவாகத் தெரிந்தது. காட்சி கொடுக்கும் உருவம் ஓர்பெண்ணின் உருவம்என்பதை அவர்கள் நன்கு தெரிந்து கொண்டனர். அது ஒரு பெண், அழகானபெண். அவள் அணிந்திருந்த வெண்ணிற அங்கியிலிருந்து வெண்நீலப்பிம்பம் பிரதிபலித்தது. அந்தஅங்கி பாதங்கள்வரை வளர்ந்து அவற்றை மூடிக்கொண்டது. அவள் தனது தலையில் வெண்துகில் அணிந்திருந்தாள். பொற்கதிர்களினால் இழைக்கப்பட்டஆடம்பரமானமகுடம் அவள்தலையில் சுடர்விட்டுத் துலங்கியது. செபிக்கும்பாவனையாக அவள் தனது கரங்களைக் கூப்பியிருந்தாள். ஆனால், அவள்உதடுகள் மவுனமாகப் பூட்டப்பட்டிருந்தன.

அந்த அழகானபெண்ணைப் பார்த்தபடியே இந்த ஐந்து பிள்ளைகளும் ஆனந்த வசத்தரானார்கள். அச்சம் அல்ல, ஆனால், அன்பு அவர்களை மேற்கொண்டது. சிறியவளாகிய ஜில்பேட் டெஜெம்பர் ஆனந்தமிகுதியால் அறிவிழந்து விழுந்தாள். விழுந்தவளை அவர்கள் வீட்டிலே கொண்டுபோய்ச் சேர்த்து, அவளுக்குத்துணையாக ஜில்பேட் வொயிசினைக் காவல்வைத்துவிட்டுத் திரும்பவும் மடத்துத் தோட்டத்திற்கு ஓடிவந்தனர்.

அவர்கள் ஓடிவந்ததும் காட்சிதிரும்பவும் காணப்பட்டது. இக்காட்சியின் போது அந்த அழகியபெண் அருகில் நின்ற மரத்தின் ஆசுப்பதிந்த கிளையில் நின்றாள். அவள்பாதங்கள் கண்ணுக்குக் காணப்படாதபோதும் அவள் ஓர் முகிலின்மீது நிற்பதாகத்தோன்றியது. இவ்விதம் முப்பதுக்குமேற்பட்ட காட்சிகளை அப்பெண் இவர்களுக்கு அருளச்சித்தமானாள். அதன்பின் அருளப்பட்ட எல்லாக் காட்சிகளும் அதே இடத்தில்தான் அருளப்பட்டன. ஆரம்ப காட்சிகளின்போது எதுவிதமான சம்பாஷணையும் நடைபெறவில்லை. மெல்லமெல்ல அவர்கள் பயந் தெளிந்தபின்னரே அப்பெண் அவர்களுடன் கலந்துரையாடத் தொடங்கினாள். முதற்காட்சி கார்த்திகைமாதம் 29-ந் திகதி அருளப்பெற்ற தாயினும் அதனைத்தொடர்ந்து நான்கு நாட்களாக அருளப்பட்டகாட்சியிலே அவள் உதட்டிலிருந்து ஒரு சொல்லாவது வெளிவரவில்லை.

### நீங்கள் விரும்புவதென்ன ?

மார்கழிமாதம் 3-ந் திகதி சாயந்தரம் ஐந்துபிள்ளைகளும் மரத்தடியில் முழந்தாளிட்டிருந்தனர். அப்பெண்ணும் வழக்கம்போலவே காட்சியருளினாள். உடனே அல்பேட் மவுனத்தை மீறி, "மாசற்ற கன்னிகை நீங்கள் தானா?" என்று கேட்டான். பிள்ளைகளைப்பார்த்துப் புன்முறுவல் பூர்த்துக் கொண்டு அவளும் உடன்பாட்டின் பாவனையாகத் தலையை அசைத்தாள். சிரிப்பைக்கண்டால் சும்மாவிடுவானா? "நீங்கள் விரும்புவதென்ன ?" என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தான் அல்பேட்.

தண்ணளியும், தெளிவுமான குரலில் அக்கன்னிகை "நீங்கள் எப்போதும் நல்லவர்களாயிருக்கவேண்டுமென்பதே" என்று பதில்கூறினாள்.

இந்த விளக்கமானபதில் பிள்ளைகளின் மனதில் ஆழமாகப்பதிந்தது. அன்றுதொடக்கம் அவர்கள் ஒவ்வொருவரும் நல்லவர்களாய் நடக்கப் பிரயாசப்பட்டனர். அதனால், அவர்கள் நடத்தையில் உண்டானமாற்றம் மற்றவர்களின் அவதானத்தைக் கவர்ந்தது.

அந்தப் பின்னேரந்தொடக்கம் ஒவ்வொருபின்னேரமும் அவர்கள் அந்தப் புனிதமான இடத்துக்குச் சென்று செபமாலை செபிக்கத் தொடங்கினர். இந்தநவீன பழக்கத்தைத்தடுக்க அநேகர் முயன்றனர். கன்னியர்மடத்துத் தலைவியும் இதில் தலையிட்டுத் தடைசெய்தாள். எவர்தடையையும் அவர்கள் சட்டைசெய்யவில்லை.

நாள் செல்லச்செல்ல எதிர்ப்பும் வளர்ந்தது. காட்சியளித்த கன்னிகையும் சிலதருணங்களில் காட்சிகொடுக்கவில்லை. எனினும், பிள்ளைகள் நாளாந்தம் அந்தப்புனிதஇடத்தில் செபமாலை செபிக்கத் தவறவில்லை. இன்னும் காட்சி அருளப்படும்போதும் ஒருநவீனம் நடைபெற்றது. அதாவது, ஐந்து பிள்ளைகளில் சிலர் சில காட்சிகளைக் காணமுடிவதில்லை. இன்னும் சிலகாட்சிகளில் திருக்கன்னிகை முற்றும்மவுனஞ் சாதித்தனள்.

### சனத்திரள் வரவர அதிகரித்தது

காட்சியினால் கண்ணியப்படுத்தப்பட்ட பொறென் என்பது ஒருசிறிய பட்டினம். அதன்குடிசனம் இரண்டாயிரம்பேருக்கு மேற்படாது. பெல்ஜியத்தின் தென்பாகத்தே பிரான்சியஎல்லையிலிருந்து ஏறக்குறைய ஐந்துமைல் தூரத்தில் உள்ளது இப்பட்டினம். "காட்சி" என்றசெய்தி கணநேரத்தில் பரவியது. அயலிலிருந்து ஆயிரக்கணக்காக மக்கள் திரண்டுவந்தனர். வந்தவர்களின் நோக்கங்கள்பல. சிலர் காட்சியைக் கண்குளிரப் பார்க்கஆசித்தனர். சிலர் நூதனம்பார்க்க விழைந்தனர். இன்னுஞ்சிலரோ கேலிசெய்யுங் கருத்துடன்வந்தனர்.

மாசில்லாத உற்பவத்திருநாளுக்கு முந்தியபின்னேரம் பதினையாயிரவருக்கு மேற்பட்ட சனத்திரள் கூடியிருந்தது. தோட்டத்தின் உள்ளும்புறமும் எள்ளிட இடமேயின்றி எல்லோரும் நெருங்கியிருந்தனர். வழக்கம்போல் கன்னிகை காட்சியளித்தாள். காட்சியைக்கண்டஐந்துபிள்ளைகளும் தங்களை மறந்து ஆழ்ந்தபரவசத்தில் மூழ்கினர். தங்களைச் சூழ்ந்திருந்த சனத்திரளையோ, அன்றேல் மற்றும்ஆரவாரங்களையோ அவர்கள் எண்ணவுமில்லை, உணரவுமில்லை.

காட்சிபார்க்க வந்தவர்களிற் சிலர் வைத்தியர். இவர்கள் பிள்ளைகளையும், அவர்களின் செயல்களையும் கூர்ந்துஅவதானித்தனர். தங்களையே மறந்திருந்த அவர்களுக்கு உணர்வுஉண்டாஎன்று பரிசோதிக்கும்படி அவர்களின்உடலில் ஊசிகளை ஏற்றினர். நெருப்புச்சுவாலையை அவர்களது விரலின்கீழேபிடித்தனர். செபத்தியானத்திலிருந்த அவர்களின் கண்களுக்குநேரே மின்சார வெளிச்சங்களைப் பளிச்செனத் தட்டினர். ஆனால், அவர்களுடைய எந்த எடும்பும் பயனற்றதாகவே, அதனால் அவர்கள் காட்சிமுடியும்வரை காத்திருந்தனர்.

காட்சி முடிந்தவுடன் வைத்தியர் பலப்பல கேள்விகளை அவர்களிடம் கேட்டனர். பிள்ளைகளோ தங்களில் செய்யப்பட்ட பரிசோதனைகளில் எவற்றையும் அறியாதவர்களாகவே காணப்பட்டனர். ஐந்துபிள்ளைகளும் ஒன்றையேகூறினர். [illegible] படக்கூறினர். [illegible] ணிகையின் மாட்சி கண்கொள்ளாததென்று கூறினர், அவளின் சவுந்தரியம் சிந்தனைக்கும் எட்டாததென்று சாற்றினர். கன்னிகை தங்களுக்குக் காட்சியளித்துக் கடாட்சித்தபோது தாங்கள் அவளின் ரூபலாவர்ணியத்திலே சொக்கியிருந்ததால் தங்களிலே செய்யப்பட்ட பரிசோதனைகளைத் தாங் [illegible] சாதித்தனர்.

(தொடரும்)

## பரதகுலத்தவர் கொண்டாடும்
# பனிமயமாதா திருவிழா

முத்துக்குளிப்புக்குப் பெயர்பெற்ற தூத்துக்குடி பனிமயமாதா வழிபாட்டிலும் பிரசித்திபெற்றதாகும். வருடந்தோறும் கொண்டாடப்பெறும் இந்தஉற்சவம் தூத்துக்குடியின் தேசிய வாழ்க்கையில் இரண்டறக்கலந்துள்ள ஒருபாகமாக விளங்குகிறது. தூத்துக்குடிமக்கள் எத்தகைய சாதி, சமய பேதமுமின்றியே இதை மிகுந்த பயபக்தியுடனும், சடங்காசாரங்களுடனும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். முத்துக்குளிக்கும் கரையோரத்திலுள்ள சகலபகுதிகளிலுமிருந்து யாத்திரிகர்கள் இதற்குவந்து குழுமுவார்கள். தூத்துக்குடிப் பரதர்சமூகத்தின் இந்தமுக்கியதிருநாளின் நான்காம்நூற்றாண்டுவிழா இன்று மங்கலகரமாகக் கொண்டாடப்படுகிறது.

தூத்துக்குடி, கன்னியாகுமரி முனையிலிருந்து 85 மைலுக் கப்பால் மன்னார்க்குடாக்கடலில் அமைந்துள்ள ஒருதுறைமுகமாகும். இத்துறைமுக நகருக்குவிஜயம்செய்யும் ஒருவரதுகணிலே முதலாவதாகத்தென்படுவன பனிமயமாதா ஆலயத்தின் உயரிய கோபுரமும், அதிலே பளபளெனப் பிரகாசிக்கும் தங்கவெண்கலச் சிலுவையுமாகும். இப்புராதன ஆலயத்திலே பொக்ஷம்போலப் பாதுகாக்கப்பெற்றுமிருந்த பயபக்தியுடன் பூசிக்கப்படும் பனிமயமாதா சுரூபத்தின் சரித்திரத்தை அறிந்துகொள்ள ஒருவர் நான்கு நூற்றாண்டுகளுக்குமுன் — அதாவது 1535-ம் ஆண்டு முத்துக்குளிக்கும் கடற்கரையிலே கிறீஸ்துசமயம்பரவிய ஆரம்பகாலத்துக்குச் செல்லவேண்டும். அக்காலத்திலே கடற்கரையோரமாகவுள்ள சகலகிராமங்களிலும் பரதர் எனப்படும் ஒரேயொரு சமூகத்தாரே வாழ்ந்துவந்தனர். மரக்கல மோட்டுதல், கடலோர வாணிபம்செய்தல், முத்துக்குளித்தல் உட்பட மீன்பிடித்தல்ஆகியனவே இவர்களின் பிரதான தொழில்களாய் இருந்தன.

1535-ம் ஆண்டு ஓர்பிரசித்திபெற்ற ஆண்டாகும். ஏனெனில், அவ்வாண்டிற்றான் பிரகாசமானமுத்துகளுக்குப் பெயர்பெற்ற கிழக்குக்கரையோரத்திலுள்ள வேறுவேறான முப்பதுஇடங்களைச்சேர்ந்த இருபதினாயிரம்பரதர்கள் கிறீஸ்துசமயத்தில் பிரவேசித்தார்கள். இதற்கு ஓராண்டுக்குமுன்னரே கோவாவில் கத்தோலிக்க மேற்றிராசனம் அமைக்கப்பட்டது. இதிலே கொச்சியும் அடங்கியிருந்தது.

கிழக்கிந்தியதீவுகளுக்கு விஜயம் செய்த மகத்தான அப்போஸ்தலரான அர்ச். பிரான்சீஸ் சவேரியார் தமது வீரத்துவமான சமயப்பிரசார வாழ்க்கையிலே பெரும்பகுதியைத் தூத்துக்குடியிலும், மணப்பாட்டிலும் புதிதாகக்கிறீஸ்துவர்களான இந்தப் பரதர்களுடன் கழித்தாரென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள பனிமயமாதாவின் திருச்சுரூபம் ஆதியில் பிலிப்பைன்ஸ் நாட்டிலே மனிலாநகரகன்னிகாமடத்தில் இருந்துவந்தது. அர்ச். பிரான்சீஸ்சவேரியார் ஆங்கு சிறிதுகாலம் தங்கியிருந்தபோது கிறீஸ்துநாதரின் அன்னையரைப்போல்தோற்றிய இந்த அழகியசுரூபம் அவரைப் பெரிதும் கவர்ந்தது. தூத்துக்குடியிலே தாம் புதிதாக மனந்திருப்பிய பரதர்கள் இதனைப் பொக்ஷம்போல் பாதுகாப்பார்களென அவர்உணர்ந்தார். அவர்கள் கிறீஸ்துவர்களாகுமுன் மீனாட்சியம்மனைப் பற்றுதலுடன் வழிபட்டுள்ளார்கள்என்பதை அவர்அறிந்திருந்தார். ஆதலால், இந்தச்சுரூபத்தைமட்டும் தூத்துக்குடிக்குக் கொண்டுபோக முடியுமானால் பரதர்களின் அந்தப் பற்றுதலைக் கன்னிமரியாயின்பக்கமாக மாற்றமுடியுமெனச் சிந்திக்கத்தொடங்கினார்.

ஆனால், இதுவிஷயமாய் அவருக்குப் பெருமஏமாற்றமே ஏற்பட்டது. மணிலாமடத்துக் கன்னியாஸ்திரிமார் அச்சுரூபத்தை எவ்வளவோ ஆழ்ந்த பக்தியுடன் பூசித்துவந்ததால் அதனை அங்கேயேவைத்திருக்க விரும்பினர். ஆதலால், அர்ச். பிரான்சீஸ்சவேரியாரின் போாவல்நிறைவேறவில்லை. எனினும், அவர் சான்சியன்தீவில் காலமாகி மூன்றுவருடங்களுக்குப்பின் அந்தக் கன்னியாஸ்திரிமார் ஒருஅர்ச்சியசிஷ்டரின் வேண்டுகோளுக்குத் தாங்கள் மறுத்துவிட்டதை உணர்ந்தவர்களாய் அதற்கு விரைவிலே பிராயச்சித்தம் செய்யவிரும்பினர்.

மனிலாநகரிலுள்ள சுரூபத்தைத் தூத்துக்குடிமக்களுக்கு அனுப்பிவைக்க அவர்கள் ஏற்பாடுசெய்தனர். 1555-ம் ஆண்டு ஆனிமாதம் 9-ந் திகதியன்று வண. மைக்கேல் வாஸ்சுவாமியார் அதனைப்பெற்றார். இவ்விதமாக அர்ச். பிரான்சீஸ்சவேரியாரின் இந்த ஆவல் கடைசியாக அவர்மரித்தபின் நிறைவேறியது. இச்சுரூபம் அர்ச். பாவிலுவானவர்ஆலயத்தில் அமைக்கப்பட்டபோது தூத்துக்குடிமக்கள் பேரானந்தமடைந்தனர். இந்தஆலயம் 1545-ம் ஆண்டு கட்டப்பட்டதாகத் தோன்றுகிறது.

தூத்துக்குடியிலே முதன்முதலாகக் கட்டப்பெற்ற ஆலயங்களுள்ஒன்றான இப்புராதன ஆலயம் இருந்தஇடத்திலே இன்று பழையஒல்லாந்தரின் கல்லறை கைவிடப்பட்டநிலையிலிருக்கின்றது. இதையடுத்துள்ளதெரு இன்றும் கெறிகோப்தெரு என்று வழங்குகிறது. (ஒல்லாந்தமொழியில் கல்லறைஎன்று அர்த்தம்.) இத்தெருவுக்கு இட்டுச்செல்லும்சந்து அர்ச். பாவிலுவானவர் சந்துஎன அழைக்கப்படுகிறது. மனிலாவிலிருந்து பனிமயமாதாவின் திருச்சுரூபத்தைப்பெற்ற சரித்திரப்பிரசித்திவாய்ந்த பழைய ஆலயத்தின் ஞாபகார்த்தமாகவே இச்சந்துக்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.

அக்காலத்தை நினைவூட்டிக்கொண்டிருக்கும் ஒருசின்னத்தை அர்ச். பாவிலுவானவர்சந்தில் இன்றும்காணலாம். அதாவது, அதன் ஆதாரபீடமாகும். போர்த்துக்கேயஆலயங்களில் ஆலயத்துக்கு நேர்எதிரே புனித சிலுவையின் இந்த ஆதாரபீடம் அமைக்கப்படுவது வழக்கம். இங்குள்ள ஆதாரபீடம் பழையபாவிலுவானவர் ஆலயத்திலிருந்த ஆதாரபீடம் போலவே இருக்கிறது. கிறீஸ்துவர்கள் நாளதுவரை அர்ச். பேதுரு, அர்ச். பாவிலு அப்போஸ்தலர்களின் திருநாட்காலத்திலே இக்கோவிலுக்கு வந்து, மெழுகுவர்த்திகள் கொளுத்திப் பிரார்த்தனை செய்வதுண்டு.

பனிமயமாதாவின் திருச்சுரூபம் பாவிலுவானவர் ஆலயத்தில்வைத்துத் தொடர்ந்து பூசிக்கப்பட்டுவரும்போது பரதர்களை ஆபத்தானகாலம் எதிர்நோக்கியது.

1649-ம் ஆண்டு ஒல்லாந்தரின் வருகையோடு கத்தோலிக்கமக்களுக்கு வியாகுலமும், ஆபத்துமானகாலம் ஆரம்பமாயிற்று. ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து அதிகாரத்தைப் பறித்தவுடனே கத்தோலிக்கரைத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாப்பரசரும் ஜனாதிபதிபெரோனும்

சம்பேதுரு, சம்பாவிலு அப்போஸ்தலர்களின் திருநாளை முன்னிட்டு ஆர்ஜென்ரீனவின் ஜனாதிபதியான பெரோன் சமீபத்திலே பரிசுத்தபிதாவுக்குக் "கண்ணியமிக்க சோபன வாழ்த்து"ச் செய்தி ஒன்று அனுப்பிவைத்தார். அதற்குப் பாப்பரசர் அளித்தபதிலிலே, "இத்திருநாளை முன்னிட்டுத் தாங்கள் அனுப்பிய சோபன செய்தி வரப்பெற்றோம்; தமது பிரிய ஆர்ஜென்ரீனமக்கள் தங்கள்கத்தோலிக்க பாரம்பரியங்களின்படி திரும்பவும் வாழ்க்கை நடத்தத்தக்கதாய் நமது திவ்விய கர்த்தர் தங்களுடைய இருதயத்தை மயக்கந்தெளிவித்துத் திருத்தியருளுமாறு அவரைப் பிரார்த்திக்கின்றோம்" எனத் தெரிவித்திருந்தார். இதுசெய்தியை "ஒசேர்வாத்தோறே றோமானோ" எனும் வத்திக்கான் தினவர்த்தமானி வெளியிட்டிருக்கிறது.

## சற்பிரசாத மகாநாடு

சர்வதேச சற்பிரசாத மகாநாட்டுக்குச் சமூகமளிக்குமாறு றியோ டி ஜனெய்ரோ சென்ற கருதினால்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், பன்னூற்றுக்கணக்கான குருமார் திவ்வியபூசை நிறைவேற்றுதற்கென்று அந்நகரிலுள்ள கோவில்களிலே சுமார் 400 பலிபீடங்கள் நவமாக அமைக்கப்பட்டிருந்தன. "சுகர்லோவ்" மலையின் பின்புறத்துக் கெதிரேயுள்ள வெளிமைதானத்திலே ஓர்விதானத்தின்கீழ் அமைக்கப்பட்டிருந்த மகாநாட்டின் விசேஷபலிபீடம் 150அடி உயரமுள்ளதாய் இருந்தது. பிறேசில்நாட்டுக்குக் கிறீஸ்துவேதத்தைக் கொண்டுசென்ற போர்த்துக்கேய கண்டுபிடிப்பாளரின் ஞாபகார்த்தமாய் அந்தஉந்நத பலிபீடத்தின் முன்பாக 40 அடி உயரத்திலே திருவிளக்கொன்று ஏற்றப்பட்டிருந்தது. தனதுநாமத்தைப் பெற்றுக்கொள்ளக் காரணமாயிருந்த பிறேசில் மரங்கொண்டு பருமட்டாகச் செய்யப்பெற்றிருந்த பாரியசிலுவை ஒன்று அதன் இடதுபுறமாக நிறுவப்பட்டிருந்தது.

சிறியனவும், பெரியனவுமாய்த் தொடர்ச்சியான பள்ளத்தாக்குகளாலான றியோநகரில் விசாலமான பெரும்மைதானங்களுக்கு இடைவெளியே கிடையாது. அதனால், மகாநாட்டுக்கென்று குவானபாரூக் குடாக்கடலிலே பெரும் விஸ்தீரணமான ஓர் பகுதி மண்போட்டு நிரப்பி, ஏறக்குறைய ஒருமைல் நீளமும், ஐந்திலொருபங்குமைல் அகலமும், இரண்டரைலட்சம் மக்கள் அமரக்கூடியதுமான ஓர் பரந்தமைதானமாக ஆக்கப்படலாயிற்று. இது பிந்த ஆகாயவிமானநிலைய விஸ்தரிப்புக்குப் பயன்படுத்தப்படும்.

சற்பிரசாத மகாநாட்டிலே மிகப்பெரும்பான்மையான திருவைபவங்கள் நடந்தேறிய மத்தியதானமாயிருந்தது, இந்த மைதானத்தில் நிறுவப்பெற்ற உந்நதமான பலிபீடமேயாகும். இந்த மைதானத்தைத் தவிர, இதனையடுத்துள்ளபாக்கங்களும், நிழல்வீதிகளும் வேறுஐந்துலட்சம் மக்களுக்குப்போதிய இடவசதியை அளிக்கலாயின. மகாநாட்டு மைதானத்திலிருந்து வடக்கே இரண்டுமைல் தூரத்தில் பிறேசிலையும், பிறநாடுகளையுஞ்சேர்ந்த சுமார் 20 பாரிய பிரயாணக்கப்பல்கள் நங்கூரமிட்டுநின்று யாத்திரிகர்களுக்கெல்லாம் மிதக்கும் ஹோட்டல்களாக உதவின.

## இத்தாலிய புதியபிரதமர்

இத்தாலியின் புதியபிரதமரான சிஞ்ஞோர் அன்ரோனியோ செக்னிஅவர்கள் சாடினியாதீவிலே சசாறிஎனுமிடத்தில் பிறந்தவர். இளமையிலே பெயர்பெற்ற நியாயவாதியாக விளங்கியவர். தற்போது 64 வயதுடையவரான இவர் சர்வகலாசாலைப் பட்டங்கள்பெற்றுப் பெறூகியா, கக்லியாறி, பாவியா, சசாறிமுதலாம் நகர்களிலுள்ள சர்வகலாசாலைகளிலும், கடைசியாக 1914-ம்ஆண்டுமுதல் றோமைநகர சர்வகலாசாலையிலும் பேராசிரியராக விளங்கியிருந்தவர். தமதுசர்வகலாசாலைப் பதவிகளுடன் அரசியலிலும் ஈடுபட்டுக் கிறீஸ்துவ ஜனநாயக கட்சியிற்சேர்ந்து ஊக்கமாக உழைத்துவந்தவர். முசோலினியின் பாசிஸ்தஆட்சி இத்தாலியில்ஆரம்பமானகாலத்திலே இவர் தற்போதைய கிறீஸ்துவ சனநாயக கட்சியினிடமாக முன்னர்இருந்த மக்கள்கட்சியை அணிவகுத்த பிரபலஸ்தர்களில் ஒருவராயிருந்தார். 1944-ம்ஆண்டு இவர் அப்போதையபிரதமர் தே காஸ்பெறி அவர்களின்கீழ் மூந்தஉதவிமந்திரியாராயும், பிந்தக் கமத்தொழில் மந்திரியாராயும், கல்வி மந்திரியாராயும் பதவிகள்வகித்திருந்தார். இவர் கமத்தொழில் மந்திரியாராய் இருந்தபோதே கிராமசீர்திருத்த பெருந்திட்டத்தை உருவாக்கினார். இந்தத் திட்டமே பின்வந்த பிரதமமந்திரிமார்களால் படிப்படியாக வெற்றிகரமாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுக் கம்யூனிஸ்தர்களின் வீழ்கைக்கு ஏதுவாயிற்று.

## கலிலேயாவாவிக் கரையிலே

கலிலேயாவாவிக் கரையிலே நவமாகக் கட்டப்பெற்ற ஆசீர்வாதப்பர்சபைச் சந்நியாசமடமானது சமீபத்திலே ஜெருசலேமின் டோர்மிஷிய மடத்தின் றுடல்வ் மடாதிபரால் ஆசீர்வதிக்கப்படலாயிற்று. இப்புதிய மடத்திலே நான்குசந்நியாசர்கள் வசித்திருந்து, கொலோன் அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்தவர்களாய் அந்தவாவிக்கரை நீளம் சஞ்சரிக்கின்ற கத்தோலிக்கமக்களை விசாரணைசெய்துவருகின்றார்கள். புதியமடத்துக் கட்டடத்தின் இருபகுதிகளுக்குமிடையிலே, நமது திவ்வியகர்த்தர் ஐந்து அப்பங்களையும், இரண்டுமச்சங்களையும் பலுகச்செய்து ஐயாயிரம்பேருக்கு உணவளித்த அற்புதசம்பவத்தை ஞாபகப்படுத்துகிற நான்காம் நூற்றாண்டுக்கோவிலின் இடிகரையானபகுதிகள் இருந்துவருகின்றன.

## கருதினாலைத் துன்புறுத்தியவர்கள்

போலாந்தின் திருச்சபை அதிபரான கருதினால் விசின்ஸ்கி ஆண்டவரைக் கைதுசெய்வதற்கும், துன்புறுத்துதற்கும் காலாயிருந்த போலிஷ் இரகசியப் பொலிஸ் அதிகாரிகளே தற்போது சிறைத்தண்டனையையும், மரண தண்டனையையும், மானபங்கத்தையும் எதிர்நோக்கிநிற்பதாக லண்டன்நகரிலே பிரசுரமாகும் போலிஷ் சுதந்திர பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது. போலாந்தின் உள்நாட்டுப்பாதுகாப்பு மந்திரியான ஸ்ரனிஸ்லாஸ் றட்கியேவிக்ஸ் என்பவர் தனதுதுணைவரான யோசெவ் சுவியாற்லோஎன்பார் சுதந்திர உலகுக்குத் தப்பியோடினதைத்தொடர்ந்து பதவிநீக்கஞ்செய்யப்பட்டிருக்கின்றார். கருதினால் விசின்ஸ்கிஆண்டவரைக் கைதுசெய்யும்படியாய் உத்தரவு பிறப்பித்தஇவர் இன்னும் மிக மோசமான தண்டனை விதிக்கப்படக்கூடிய நிலைமையிலே இருக்கின்றார். பாதுகாப்பு உதவி மந்திரியான றோமான் றொம்கோஸ்கிஎன்பவர் தம்முடைய பதவியிலிருந்து நீக்கப்பட்டு, கம்யூனிஸ்த கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுத் தற்போது சிறைவாசஞ் செய்துவருவதாக அறிவிக்கப்படுகிறது. கருதினால்ஆண்டவர்மீது வழக்குத்தொடர்ந்த பொலிஸ்ஏசன்றுவான ஜோஸ் றொசான்ஸ்கிஎன்பவர் விசாரணையை எதிர்நோக்கிச் சிறைச்சாலையில் இருந்துவருவதாக "றைபூனலுடு" எனும் அதிகாரபூர்வமான கம்யூனிஸ்த பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

## தொழிலாளரான கன்னியாஸ்திரிமார்

பிரான்சிலே தொழிலாளிகள் மத்தியில் தொழிலாளிகளாயிருந்து அப்போஸ்தலிக்கதொண்டாற்றிவருகின்றகுருமார் இருந்துவருகின்றனர். ஆனால், இத்தாலியிலே தொழிலாளிகளான பெண்பிள்ளைகள்மத்தியில் தொழிலாளிகளாயிருந்து தங்கள்அப்போஸ்தலதொண்டைப் பிரயாசைக்கஞ்சாது சித்திகரமாயும், திறமையாயும் நடத்திவருகின்ற "தொழிலாளிகளான கன்னியாஸ்திரிமார்" இருந்துவருகின்றனர். நசரேத்தின் திருஇல்ல சபையைச்சேர்ந்த இவர்கள் அந்நாட்டின் கைத்தொழில், வர்த்தக ஸ்தாபனங்களிலுள்ள யந்திரங்களிலும், தொழில்வளமிக்க வடபகுதி மில்களிலும் வேலைசெய்து வருகின்றார்கள். கைத்தொழில், வர்த்தக ஸ்தாபனங்களில் சேருமுன் இவர்கள் மற்றுந்தொழிலாளரிடையே வேலைசெய்வதற்குப் போதிய பயிற்சியளிக்கப் படுகின்றார்கள். தொழிலாளிகளான ஏனைய பெண்களைப்போன்று அதே வேலைகளை, அதேவேளையிலே இவர்களும் செய்துவருகின்றார்கள். தொழிலாளிகளின் "மனதைத்திருப்ப" இவர்கள் முயல்வதில்லை. ஆனால், தாங்கள்காண்பிக்கும் முன்மாதிரிகையின் செல்வாக்காலே அவர்கள் மனதைத் திருப்புகிறார்கள். அதனால் இவர்களின் உடன்தொழிலாளிகளான பெண்பிள்ளைகள் தங்கள்வேதகடமைகளைத் திரும்பவும் அநுசரிக்கத்தொடங்கியது மாத்திரமல்ல, அநேகர்இவர்களுடைய சபையிலே சேர்ந்துமிருக்கின்றனர். அவ்வாறு சேர்ந்தவர்களிற்சிலர் முன்பு கம்யூனிஸ்தர்களாய் இருந்தவர்கள்.

## குஷ்டரோகியான குருவானவர்

திருஇருதயநாதர் சபையைச் சேர்ந்த ஓர்மிஷனரிய குருவானவரும், கடந்த 28 வருடங்களாக ஓர் குஷ்டரோகியாய் இருந்துவருகிறவருமான வண. ஈயூஜின் ஷோபிளே சுவாமியார் சமீபத்திலே தமதுகுருத்துவ தங்கயூபிலியைக் கொண்டாடியிருக்கின்றார். பீஜிதீவுகளைச் சேர்ந்த மகோகாய்தீவில் சஞ்சரித்துவருகின்ற இப்பிரான்சிய குரவர் தமதுமிஷனரிய வாழ்க்கையிலே முதல் 22வருடங்களை ஜில்பேட் தீவுகளிலே திருத்தொண்டாற்றுவதில் செலவிட்டபின்னர் தமது சுவநாடாகிய பிரான்சுக்குத் திரும்ப ஆயத்தப்பட்டு வரும்போது, தம்மைக் குஷ்டரோகம் பீடித்திருக்கக்கண்டு உடனே தானே குஷ்டரோகர்களின் குடியேற்றதலம் ஒன்றைக் கொண்டுள்ள ரவாரு தீவுக்குச் சென்றார். இவர் அங்குபோய் ஆறுமாதகாலத்திலே குஷ்டரோகிகளின் அந்தக்குடியேற்ற தலத்தில் அதிசயிக்கத்தக்கமாற்றங்கள் ஏற்படலாயின. முயற்சியும், புன்னகையும் காணப்பட்டன. அத்தலத்தின் பகுதிஅதிகாரியாக இவர்நியமனம்பெற்றுக் குஷ்டரோகர்களின் வாழ்க்கையிலே திரும்பவும் சமயானுசாரத்தைக் கொண்டுவரலாயினர். 25 வருடங்களுக்குப்பின் இன்று 78 வயதுடையவரான சுவாமியார் அங்குள்ள குஷ்டரோகிகளின் விசாரணைக்குரவராக இன்னுமே இருந்துவருகின்றார். காலத்துக்குக்காலம் இவரைப்பீடித்த குஷ்டரோகம் குணமாகிவிட்டதாகக்காணப்பட்டது. ஆனால், அத்தீவைவிட்டு அவர் வெளிகொண்ட ஒவ்வோர்முறையும் அது திரும்பவும் அவரில் தோற்றியது. சுவாமியாரின் குருத்துவதங்க யூபிலியின்போது பரிசுத்தபாப்பரசர் அவருக்குத் தமது ஆசீர்வாதமும், சோபன வாழ்த்துத் திருமுகமும் அனுப்பிவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி மாதம்

போதுக் கருத்து: கிறீஸ்துவ தர்மப்படி மக்களிடையே அமைதியும், ஒத்துழைப்பும் அதிகரிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து: ஆசியாவில் கிறீஸ்துவ தர்மப்படி விவாகமும், குடும்பவாழ்க்கையும் நடைபெறும்படியாக மன்ருடிக் கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
ஆவணி மாதம் 4-ந் திகதி

## பேச்சும் செயலும்

இன்றைய ஸ்ரீலங்காவிலே உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்றுபேசுவதும், பேச்சு ஒன்று, செயல் மற்ருென்ருய் இருப்பதும், பகட்டாகப்பேசிப் பாமரமக்களை ஏமாற்றுவதும் பெரிதுங்கவலைக்கிடமான வகையிலே அதிகரித்துவரக்காண்பது மிகவும விசனத்தைத் தருவதாகும். எமதுநாடு சுதந்திரமடைந்தபின்னர் புற்றீசல்களைப்போன்று எழுந்துள்ள இயக்கங்களோ அம்மம்ம! இம்மட்டன்று. இவற்றிலே கின்று பிடித்தவைகள் சிலவாகும். கிழலைப்போலச் சென்றுமறைந்தவைகள் பலவாகும். காரணம் என்ன? அகத்திலே சுயநல நோக்கம். புறத்திலே பொதுநலஊக்கம். மதுவிலக்குக்காக மாரடித்து வாதிக்கிறவர்கள் பலர். ஆனல், தங்கள்வாழ்க்கையிலே இவர்களில் மதுபானிகள் பலர். பொதுமக்களின் சமுகத்திலே சுயமொழிககாகப் பகிரங்கமாய் வாதாடுகிறவர்கள் பலர். ஆனல், இவர்களிலே அந்தரங்கத்தில் ஆங்கிலத்தைக் கட்டித்தழுவுகிறவர்கள் பலர். மாமிசத்துக்காக மிருகங்களை வெட்டிக்கொல்வதை விலக்க வேண்டுமென்று பிரசாரஞ் செய்கிறவர்கள்பலர். ஆனல், இவர்களிலே மாமிசம்புசிக்கிறவர்கள்பலர். அன்று பாராளுமன்ற அங்கத்தவர்ஒருவர்சமேதராய் நாற்பதுபேர் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களைப் பேட்டிகாணச் சென்றனர். மாமிசத்துக்காக மிருகங்களைவெட்டிக்கொல்வதை விலக்கிவிடுமாறு பல்லாயிரக் கணக்கானேர் கைச்சாத்திட்ட மனுஒன்றை அவருக்குச் சமர்ப்பித்தனர். அப்போது அவர் "உங்களில் மாமிசம் புசியாதவர்களெல்லாம் கை உயர்த்துங்கள், பார்க்கலாம்" என்ருர். ஒருமனுத்தானும் கை உயர்த்தவில்லை. "நல்லது, நான் விலக்கவேண்டுமென்று நீங்கள் ஆசிப்பதை நீங்களே முந்தவிலக்குங்கள்" எனச்சொல்லி அவர்களை வழியனுப்பிவைத்தார் பிரதமர். சிங்களம், தமிழ்எனும் இருசுயபாஷைகளுக்கும் சமஅந்தஸ்து அளிக்கப்பட வேண்டுமென்று கம்யூனிஸ்தகட்சியினரும், சமசமாஜகட்சியினரும் யாழ்ப்பாணத்திலே — தமிழ்மக்கள்மத்தியிலே மாபெரும் ஆரவாரஞ் செய்து மாபெருங்கூட்டங்கள் நடத்துகின்றனர். அவற்றின் முடிபுதான் யாது? சிங்களத்துக்கும், தமிழுக்கும் சமஅந்தஸ்துத் தேடிக்கொடுக்க முன்வந்தவர்கள் அரசியல்வாதிகளான தமிழரையும், ஐக்கியதேசீயக் கட்சியினரையும் கண்டிக்கின்றனர். அவர்கள் சமய – சமூக சம்பந்தமான கருமங்களைப் பயன்படுத்தி அடுத்தபொதுத் தேர்தலிலே வாக்குகளைப்பெற முயற்சிப்பதாக முறையீடுசெய்கின்றனர். ஈற்றில் கம்யூனிஸ்தக்கட்சிக்கே, சமசமாஜகட்சிக்கே வாக்குகளை அளிக்க வேண்டுமென்று நேர்முகமாகவும், மறைமுகமாகவும் கேட்டுக்கொள்ளுகின்றனர். சிங்களர் – தமிழர் ஐக்கியத்தை நிலைநாட்டவேண்டுமென்று முயற்சிப்போர் அவர்களின் ஐக்கியத்தைக் கெடுக்கவே முனைகின்றனர். தமிழர்முன்னணியை உருவாக்கச்சிந்திக்கிறவர்கள் அத்தாலே தமிழர் பின்னணிதான் உருவாகுமோவென்று சிந்திக்கிருர்களில்லை. தமிழ்மக்களுக்கெல்லாம் இஃது ஓர்பெருஞ் சோதனைகாலம். அடுத்தபொதுத்தேர்தல் வருமுன் அவர்கள் எத்தனையோ காரியங்களை ஆராய்வாகச் சிந்திக்கவேண்டியகாலம். அந்தத் தேர்தலிலே எந்த அரசியற் கட்சி வெற்றிபெற்று அரசாங்க கட்சியாக வரும்? எந்தஎந்தக் கட்சிகள் தோல்வியுற்று எதிர்க் கட்சியாக ஒன்றுசேரும்? அப்போது அரசாங்ககட்சியுடன் தமிழர்கள் சேர்ந்துவாழ்வதா? அன்றேல் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து ஆரவாரஞ் செய்துகொண்டிருப்பதா? ஒவ்வோர் கட்சியும் தேர்தலிலே நான் வெல்லுவேன், நான்வெல்லுவேன் என்று சொல்லும். தனக்கே வாக்குக் கொடுக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளும். ஆனல், வெற்றியெடுப்பது ஒரு கட்சியே. மற்றவையெல்லாம் சில்லறைக் கட்சிகளேயாம். அடுத்த பொதுத்தேர்தலுக்குமுன் ஐக்கிய தேசீயக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ்கட்சி, தமிழரசுக்கட்சி, கம்யூனிஸ்தகட்சி, சமசமாஜகட்சி என்பனவாயுள்ள அரசியற்கட்சிகள் யாழ்ப்பாணத்திலே ஒன்றின்பின்ஒன்ருய் — ஒன்ரேடொன்று போட்டியாய் அநேகமாபெருங் கூட்டங்கள் கட்டாயம் நடத்தியேதீரும். ஆனல், அவற்றின் பேச்சிலும்செயலிலும், போக்கிலும் நோக்கிலும் விழிப்பாயிருந்து மதியூகமாகச் செயலாற்றுவதுதான் தமிழ்மக்கள்மேற் சுமந்த பெருங்கடன் என்க.

---

ஞாபகசக்தி குறைவான பேராசிரியர் ஒருவர் தமது மனைவியுடன் கோவிலுக்குச் சென்ருர். அங்கிருந்து திரும்புகையில் அவருடைய கக்கத்திலே இரண்டுகுடைகள் இருந்தன.

வழியிலே வரும்போதுஅவர் மனைவியைப்பார்த்து, "உம்முடைய குடையை நீர்மறந்துவிட்டீர்; ஆனல், நான் என்னுடைய குடையை மாத்திரம் அல்ல, உம்முடைய குடையையுமே மறவாது எடுத்துவருகிறேன்.

மனைவி — இ[illegible] எங்களுக்கு[illegible] கிடையாதே.

## ஆசா. யோசேவாஸ் முனிவர்

— 3 —

### தேசீய பாஷைகளில் சரித்திரம் வெளிவந்த வரலாறு

யோசேவாஸ்முனிவர் சரித்திரம் போர்த்துக்கேய பாஷையிலே முதன்முதலாக வெளியிடப் படலாயிற்று. 1795-ம் ஆண்டு கோவைத் தியான சம்பிரதாய குருமார்சபையைச் சேர்ந்த வண. செபஸ்தியன் டி றெகோ என்னும் குருவானவரே அதை எழுதினர். பிரான்சிய பாஷையிலும், இத்தாலியபாஷையிலும் அது மொழிபெயர்க்கப் பட்டிருந்தது. ஆயினும் முனிவர் சேவைசெய்த இலங்கையின் தேசீயமொழிகளில் அவருடைய சரித்திரம் இரண்டுநூற்ருண்டுகளாக வெளிவரவில்லை.

1910-ம்ஆண்டு மார்கழிமாசம் 3-ந் திகதி இலங்கை மேற்றிராணிமார் யோசேவாஸ் முனிவரைப்பற்றி ஒருகூட்டு நிருபம் வெளியிட் டிருந்தார்கள். அந்நாட்களிலே இலங்கைக்கத்தோலிக்கர்மத்தியில் முனிவருடைய பெயர் மங்கி மறைந்துகொண்டிருந்தது.

கோவைக்குருமார் வரிசையைச்சேர்ந்த கபிரியேல் பச்சேக்கு என்னும் குருவானவர் போர்த்துக்கேயபாஷையில் எழுதப்பட்டிருந்த தமதுமுன்னேடியின் சரித்திரத்தை அக்காலப் பாஷைநடைக்கேற்பத் தமிழாக்கம்செய்தார். கபிரியேல் பச்சேக்கு சுவாமியவர்கள் இலங்கையின் நூதன நட்சத்திரமென்று அறியப்பட்டுவந்தார். "ஞானஅப்பம்", "கன்னியர் குரவை", "தேவப்பிரசை திருக்கதை" முதலிய நூல்களின் ஆக்கியோன் இவரே. இவர் முனிவரைப்பற்றிஎழுதிய மொழிபெயர்ப்பு கைஎழுத்துப் பிரதியாகவேயிருந்து காலக்கிரமத்தில் கத்தோலிக்கர்மத்தியில் காண்பது அரிதாகிவிட்டது.

பழைய கத்தோலிக்க தமிழ் நூல்களை ஆராய்ந்துபதிப்பிப்பதில் ஆச்சரியமான திறமைகொண்டிருந்த நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசர் அவர்கள் தமக்குக்கிடைத்த கைஎழுத்துப் பிரதிகளைப் பரிசோதித்து யூலன் ஆண்டவர் காலத்தில் 1911-ம் ஆண்டில் யோசேவாஸ் முனிவர் சரித்திரத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினர். யாழ்ப்பாணம், சஞ்சூசைமா முனிவர் அச்சகத்திலே இந்நூல் குறித்த ஆண்டில் அச்சிடப் படலாயிற்று. அவ்வாண்டுதான் முனிவர் மரணத்தை ஞாபகமூட்டும் இரண்டாம் நூற்ருண்டாகும்.

சிங்களத்தில் யோசேவாஸ் முனிவர் சரித்திரத்தை வெளியிட்டவரும், "கத்தோலிக்க மெசஞ்சர்" பத்திரிகையின் துணை ஆசிரியராய் இருந்தவருமான திரு. டி. பி. குருப்பு அவர்கள் சொல்வதுவருமாறு:

"யோசேவாஸ் முனிவரைப் பற்றி இலங்கை மேற்றிராணிமார் வெளியிட்ட கூட்டறிக்கையை வாசித்தேன். சிங்களத்திலே அந்நாட்களில் ஒருசிறுநூல் கூட எழுதப்பட்டிருக்கவில்லை. [illegible]வார்களென்று [illegible]எதிர்பார்த்தது வீணாயிற்று. கடைசிவரையும் ஒருவரும் இம்முயற்சியை ஆரம்பிக்காதபடியால் நானே இதை ஆரம்பிக்கவேண்டும்என முடிவுசெய்தேன்.

"நான் 1897-ம் ஆண்டு சிங்களம் ஏழாம் வகுப்பில் சித்தியடைந்திருந்தேன். அதன்பின் பதினறு வருடகாலமாகச் சிங்களநூல்களையாவது, பத்திரிகைகளையாவது நான் வாசிக்கவில்லை. அதனல் எனது தாய்மொழியில் முனிவர் சரித்திரத்தை எழுதுவது சுமக்கக்கூடாத ஓர் பாரமாயிருந்தது. எழுதுவதற்கு யோசேவாஸ் முனிவர் அற்புதமாய்த்துணைபுரிந்த ஒருசரித்திரத்தை நான் எங்கேயோ வாசித்தஞாபகமிருந்தது. அந்தத் துணிவுடன் பிரான்சிய, ஆங்கில, சிங்கள அகராதிகளை விரித்துவைத்துக்கொண்டு எனது மொழிபெயர்ப்பை ஆரம்பித்தேன்.

"மூலநூலில் ஒருஅதிகாரத்தை வாசித்துவிட்டு அதை எனது மொழியில் எழுதுவேன். ஒவ்வொரு இராவும் இவ்வாறு வேலைசெய்துவந்தேன். வேலை ஆரம்பமாகுமுன் "உமாக ஜாதகாயா" என்ற சிங்களநூலை வாசிப்பது எனது வழக்கம். ஏனெனில், இந்நூலின் நடையும், தொனிஇனிமையும் எனது நூலிலும் காணவேண்டுமென நான்விரும்பினேன்.

"ஊர்ச்சம்பவங்களை அறியக் கன்வெல, சீதவாக்கை, போளவத்தைமுதலிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள வயோதிப கத்தோலிகருடன் இருந்து சம்பாஷித்துப் பல விஷயங்களை அறிந்துகொண்டேன்."

இந்தநூல் மகோண அச்சகத்தில் 1916-ம் ஆண்டில் அச்சிடப் பட்டது.

— அமுது

---




## சதாசகாயமாதா கோணம்

### "மனந்திரும்பினேன்"

கொள்ளுப்பிட்டியில் எல்லோராலும் நன்கறியப்பட்ட ஒருஉத்தம கத்தோலிக்ககுடும்பத்தைச் சேர்ந்தவன் நான். நமதுசமயம் விலக்கியுள்ள சில தகாத கூட்டங்களுக்குச் சமுகங் கொடுத்ததின்பலனய், நாலு வருடங்களுக்குமுன் நான் "பெந்திக்கோஸ்" தில் சேர்ந்தேன். சேர்ந்தது மாத்திரமல்ல, அச்சபையின் சமயகுருவரிசையிலும் உட்பட ஆயத்தப்படுத்தினேன். எனது மதமாற்றத்தின்பின் என்விஷயங்கள் எல்லாம் பிழைபோலத் தோன்றின. வீட்டிலோ எப்போதுந் தொந்தரவும், கலகமும், அமைதியீனமுந் தலைகாட்டத் தொடங்கின. பெந்திக்கோஸ்த் மிஷனரிமார் எங்கள் இல்லத்தை அடிக்கடி சந்தித்து என்மனைவியையும்,

என்பிள்ளைகளையும் தம்சபையிற்சேர்க் கப் பகீரதபிரயத்தனங்கள் செய்தனர். ஆனால், அவையொன்றும்பலிக்கவில்லை.

சொற்பநாட்களின்பின் நான்கவலைக் கேதுவான ஒருதொந்தரவுக்குள் அகப் பட்டு அந்தரிக்கலானேன். என்மனை வியின் ஆலோசனைக்கிணங்கிச் சதா சகாயமாதாவுக்கு ஒருநேர்த்தி வைக் கச்சம்மதித்தேன். எனது வேண்டு கோள் ஏழு நாட்களுக்கிடையில் கிடைக்கவேண்டுமென்றுங் கோரிக் கொண்டேன். எனது வேண்டு கோள் கிடைக்குமென்று நான்சற்றும் நம்பவேயில்லை. என்மனைவியின் அலட் டுத் தாங்கமுடியாமலே நான் இவ்வி தம் செய்யநேர்ந்தது. ஆனால், எண்ணி ஏழுநாட்களில் நான்கேட்டுக்கொண்ட மூன்றுகாரியங்களையுங் கருணையுள்ள சதாசகாயமாதா எனக்கருளச் சித்தங் கொண்டா. என்ன அதிசயம் என்று நான்பிரமித்துப்போனேன்.

நான்கொடுத்த வாக்கின்படி, என் மூதாதையர்களின் சமயத்தில் நான் திரும்பவும் சேர்ந்து கொண்டேன். நாங்கள் எல்லோரும் இப்போது சந் தோஷமாகவாழுகிறோம். எங்கள் இல் லத்தில் சமாதானம், நிம்மதி முன்னொ ருபோதும் இல்லாதவிதமாக நிலவுகின் றன. இஃது பார்க்கிறவர்களுக்கு அதி சயத்தை மாத்திரமல்ல, அருட்சியை யுங் கொடுக்கின்றது.

இந்தச்சந்தர்ப்பத்தில் நான் இன்னு மொருவிஷயத்தைக் குறிப்பிடவிரும் புகிறேன். மரியாயின்சேனையிற்சேர்ந்த ஒருமாது எங்கள் வீட்டிற்குவந்து எனக்குச் சதாசகாயமாதாவின் அற் புதவாவணிக்கமொன்றைக் கொடுத்து, அதைநான் அணிந்துகொள்ள வேண் டுமென்றுங் கேட்டுக் கொண்டார். அதுவுமல்லாமல், "இதை அணிந்து மூன்றுமாதங்களுக்குள் நீர் திரும்ப வும் எங்கள் கத்தோலிக்க சமயத்திற் சேர்ந்து கொள்ளுவீர்" என்று ஒரு தீர்க்கதரிசனமும் சொன்னார். அது வும் பலித்தது. ஆண்டவரின் இரக்க மும், சதாசகாயமாதாவின் தயவும் இருந்தபாடென்னே! நான் இதோ திரும்பவும் ஒன்றானதும், உண்மையா னதும், பரிசுத்தமானதுமான அப் போஸ்தலிக்க கத்தோலிக்கதிருச்சபை யின் பிள்ளையாயிருக்கும் பாக்கியத்தை அடைந்திருக்கிறேன். சர்வேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக! எங்கள் ஆண் டவராகிய கிறீஸ்துநாதரின் தாயாரா கிய சதாசகாயமாதா ஸ்துதிக்கப்படுவா வாக.

[கொள்ளுப்பிட்டியில் வசிக்கும் லைய னல் ஜயசிங்க, "நோவனைப் புதினம்" என்னும் ஆங்கில பத்திரிகைக் கெழுதி அனுப்பிய கடிதத்தின் சாரம்.]

## 2-ம் வருட மரணஞாபகம்

பிறப்பு — இறப்பு

19. 10. 49. — 5. 8. 53.




**REX**

அன்பெனும் அமுதே எந்தன்
ஆருயிர்க் கினிய அண்ணா!
இன்பமே யில்லை யிங்கென்
றெண்ணியோ பிரிந்து சென்றாய்
உன்னையே நினைந்து வாடும்
உனதருந் தம்பி ஐயா
அன்னையர் தந்தை யர்க்காய்
அமலனை வேண்டு வாயே.

G. ஆனந்தராசா,
மரியா நந்தவனம்,
வல்வெட்டித்துறை.

## குடும்ப செபமாலையும் தேவ அழைத்தலும்

(A. K.)



(வண. பற்றிக் பெயிற்றன் சுவாமிகளது கட்டுரைகளைத் தழுவி எழுதப்பட்டது.)

(சென்றவாரத் தொடர்ச்சி)

குருமார், சந்நியாசர், கன்னி யர்கள் தேவஅழைத்தலைப்பற்றி அடிக்கடி பேசுவது, பிரசாரம் செய்வதெல்லாம் ஏதோ ஒருபக் திக்குரிய உணர்ச்சியைக்கொண் டென நாம் எண்ணக்கூடாது. எங்கு பார்த்தாலும் குருமார் இல்லாக் குறையிருப்பதால் இது மிகமுக்கியம் என்பதில் சந்தேக மேயில்லை. நமது மேற்றிராச னங்களைக் கவனிப்போம். எத் தனை பங்குகள் இன்னும் பத் துப்பதினைந்து கிராமங்களைக் கொண்டிருக்கின்றன! எத்தனை புதுப்பங்குகள் நிறுவலாம் குரு மார் மட்டுமிருந்தால்! இப் போதுஉழைக்கும் குருமாரிலும் எத்தனையோபேர் வயோதிகர்!

நாம் ஒருகாலையில் கண்விழிக் கிறோம். நமதுபங்கில் — மேற் றிராசனத்தில் குருயாரே இல்லை யென்று கற்பனைசெய்து பார்ப் போம். என்னநடக்கும்? ஆல யத்திற்குச்செல்லுகிறோம். பூசை கிடையாது. திவ்வியநற்கருணைப் பேழைக்குமுன் விளக்குக்கிடை யாது. ஏனெனில், ஆலயத்தில் நற்கருணைஆண்டவர் இல்லை. நமதுபெற்றோர் சாகக்கிடக்கி றார்கள். சாகுமுன் அவஸ்தைப் பூசுதல்பெற்றுப் பாக்கியமாய் மரிக்க ஒருகுருவானவரை எதிர் பார்க்கிறார்கள். ஆனால், அவர் தான் இல்லையே. மனிதபலவீ னத்தால் நாம் ஒருசாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளு கிறோம். அதனால், தேவஇஷ்டப் பிரசாதத்தை இழந்துவிட் டோம். பாவசங்கீர்த்தனஞ் செய்த, பாவமன்னிப்புப்பெற ஆயத்தப்படுகிறோம். ஆனால், குருவானவர் இல்லை.

இதெல்லாம் வீண் கற்பனை அல்ல. ஐரோப்பியநாடுகளிலே முற்காலத்தில் இவ்விதம்நடந் திருக்கிறது. இரும்புத்திரை, மூங்கில்திரை நாடுகளிலே இன் றும் இவைகள்நடக்கின்றன. குருமடங்களும், கன்னியர்மடங் களும் பூட்டப்பட்டுவிட்டன. வாலிபர்கள் குருமாராகக் கூடா தென்ற ஒரேகருத்துடன் இத் தகையஅநீதிகளைப் புரிந்திருக் கிறார்கள் விரோதிகள். இவ்வித மாய்ச் சத்தியதிருச்சபையைக் கவிழ்த்துவிடமுடியும், நசுக்கி விடமுடியுமென்று நினைக்கிறார் கள். நமது நாட்டில் குருமாருக் கும், கன்னியர்களுக்கும் சந்நி யாசர்களுக்கும் குறையில்லையா? கடவுள் தேவ அழைத்தலைக் கொடுக்கிறதில்லையென்று நாம் சொல்வதுசரியா? தமதுதிருச் சபை எங்கும்பரவவேண்டுமென ஆசிக்கின்றஅவர் குருத்துவத் துக்குவாலிபர்களை அழைக்காம லிருப்பாரா? உண்மைக் கார ணம், தேவஅழைத்தலை ஆத ரித்து, அந்தநல்லஉணர்ச்சியை வளர்க்கவேண்டியவர்கள் தங் கள்பொறுப்பைக் கவனியாதது தான். இதுயாருடைய பொறுப் பு? பெற்றோருடையபொறுப்பு. மற்றவர்களைவிட அவர்களுக் குத்தான் இது விஷயத்தில் பொறுப்புஅதிகம். நமதுபிள்ளை களின் பிஞ்சுஇருதயங்களில் கட வுள் 'தேவஅழைத்தல்' என் னும் வித்தை விதைக்கிறார். இந்தவித்துக்கு நல்லசூழ்நிலை இல்லாவிடின் அது கருகிப் போகும். காய்ந்துபோகும். நாம் நமதுபிள்ளைகளுக்குக் கடவுள் அன்பு, தேவதாய்அன்பு, வே தம்என்னும் இத்தகையசூழ்நிலை யை நமதுவீட்டில் உண்டுபண் ணாவிடின் தேவஅழைத்தல் பல னளிக்காது.

குடும்பசெபமாலை சொல்லும் குடும்பங்கள் தேவஅழைத்தலுக் குப் பொருத்தமான நந்தா வனங்கள்எனலாம். எந்தக் குடும்பங்களில் தினமும் செப மாலைசொல்லி வந்திருக்கிறார் களோ, அந்தக்குடும்பங்களில் பையன்கள் குருமாராகியிருக்கி றார்கள்என்பதற்குச் சரித்திர மேசான்று. குடும்பசெபமாலை பலநன்மைகளையும், ஆசீரையும் பெற்றுத்தருகின்றது. அத் துடன், பிள்ளைகளுக்குவீட்டில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்து கிறது. தேவஅழைத்தலுள்ள பிள்ளைகள் தினமும்செபமாலை செபித்துவருவதால் கடவுளை அதிகமாய் நேசிக்கிறார்கள். தியாகம்செய்யப் பயிற்சிபெறுகி றார்கள். சகலத்தையும் கிறீஸ்து வுக்காகத் துறக்கவேண்டுமானல் சுயப்பரித்தியாகக்குணம் இன்றி யமையாததன்றோ! கடவுளும் பிள்ளைகளுக்குத் தேவஅழைத் தலைத்தருகிறார். என்னபாக்கி யம்!

ஆகையால், பிள்ளைகள்மத்தி யில் தேவஅழைத்தலென்னும் வித்துவளர நாம உதவியா யிருக்கவேண்டும். நாம் பிரசங் கங்களைச் செய்யவேண்டிய அவ சியமில்லை. தினமும்பிரமாணிக் கமாய்க் குடும்பத்தோடு திருச் செபமாலை சொல்லிவந்தாலே போதும். உலகிலே மிகமிகச் சிக்கலான சங்கடங்களிலே மக்கள் பக்தியோடும், நம்பிக் கையோடும் கன்னித்தாயை அண்டிச் சென்றார்கள். செப மாலை செபித்தார்கள். அந்த நல்லதாயும் தமதுமக்களுடைய மன்றாட்டைக் கேட்டருளினர். இக்காலத்துப் பற்பலகுறைகளி லே போதியகுருமார்இல்லாதது ஒருபெரியகுறை. நாமும் செப மாலையைச்சொல்லி நமது அரு மைத்தாயை அணுகினல், அவர் இப்போதும் நம்மைப் புறக்க ணிக்கமாட்டார். முதல்குருவாம் கிறீஸ்துநாதரை உலகிற்குக் கொடுத்ததுபோல், இப்போதும் கிறீஸ்துவைப் பின்செல்லுகிற பலரைக்கொடுக்கத் தயங்கமாட் டார். ஆகவே, குடும்பத்தில் செபமாலை சொல்லுவோம். அநேககுருமாருக்காகப்பிரார்த் திப்போம். நமது குடும்பத்திலி ருந்தும் கடவுள் ஒருவரையாவது தமது ஊழியத்துக்குத் தெரிந் தெடுக்குமாறு இரந்து கேட் போம்.

## NOTICE TO PRINCIPALS

To avoid in the future the difficulty arising from the discrepancy in names in the Qualification and Birth Certificates, please note that the names of Candidates for all examinations should be filled in the application forms exactly as found in the Birth Certificates of Candidates and no other document.

Please insist on the production of Birth Certificates (**not** Baptismal Certificates) before the application forms are filled in.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager of R.C. Schools.
Jaffna, 1-8 55.

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

### I

தாராதரப்பத்திரங்களிலும், பிறப்புச் சாட்சிப்பத்திரங்களிலும் அநேகரின் பெயர்கள் வித்தியாசமாயிருப்பதினல் பெரிய தொந்தரவுக்கிடனுயிருக்கிறது. எனவே, இத்தொந்தரவைத் தவிர்ப்ப தற்காக, பரீட்சைக்குப் பிள்ளைகளை அனுப்பும்போது விண்ணப்பப்பத்திரங் களில் அவர்களுடைய பெயர் பிறப்புச் சாட்சிப்பத்திரத்திலுள்ளபடியே நிரப் பப்படவேண்டும்.

பரீட்சை விண்ணப்பப் பத்திரங்கள் நிரப்பப்படமுன்னர் பரீட்சார்த்திகள் தங்கள் பிறப்புச்சாட்சிப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். ஞானஸ்நானப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட மாட் டாது.

### II

பிறப்புச்சாட்சிப்பத்திரம் அல்லது பிறந்ததிகதியை அத்தாட்சிப்படுத்தும் வேறுபத்திரம் இல்லாமல், இலங்கை யிற்பிறந்த எந்தப் பிள்ளையையும் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளில் சேர்க்கப்படாதென வித்தியாதிபதி தெரிவிக்கிறார். இலங்கைக்குவெளியே பிறந்தவர்கள் பாடசாலையிற் சேர்ந்து 3 மாதஎல்லைக்குள் அப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

தலைமைஆசிரியர் எல்லோரும் இதிற்கவனமெடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager of R. C. Schools
Jaffna, 22-7-55.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## பச்சைக்கிளி

'ஜெயம்'

வண்ணப் பச்சைக் கிளியம்மா!
வளைந்து சிவந்த மூக்கம்மா!
தின்னக் கனிகள் தந்திடுவேன்
திரும்பி என்னைப் பாரம்மா!

•

வட்ட வட்டக் கண்ணம்மா!
வாராய் இங்கே கண்ணம்மா!
கட்டிப் பாலுந் தந்திடுவேன்
கனிவாய்ப் பாட்டுப் பாடம்மா!

•

சோலைக் காட்டுப் பொன்னம்மா!
சொன்னது சொல்லுஞ் சொர்ணம்மா!
கோவைப் பழமுந் தந்திடுவேன்
கொத்திக் கொத்தித் தின்னம்மா!

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

அலைமோதுங் கடலில் பயணஞ்செய்யும் கப்பல்களிலும், ஆகாயத்தில் ஊர்ந்துசெல்லும் விமானங்களிலும் திசையறிகருவி உண்டு. இக்கருவியிலுள்ள ஊசி எப்போதும் வடக்குத் திசையைக் காட்டிக்கொண் டிருக்கும். இதைக்கொண்டு கப்பலோ, விமானமோ செல்லவேண்டிய திசையை அறியலாம். அது இல்லாவிடில் "சுற்றிச்சுற்றிச் சுப்பருடைய கோடிக்குள்" என்றுதான் பயணமிருக்கும்.

மக்களில் அநேகர் தாங்கள் செல்லவேண்டிய திக்கறியாமல் திகைக்கக் காண்பது மிகவும் விசனத்துக் குரியது. திசையறியாமற் செல்லுங்கப்பல் ஏதோ ஒருகரையை அடையுமென்று கூறலாம். ஆனால், தன்சீவியத்தின் நெறியறியாதவன் சரியாய், நெறியாய்ச் சீவிக்கமுடியுமா?

நெறியோ, நோக்கமோ சீவியத்தில் இல்லாமற் சீவிப்பவர்களை எண்ணிப்பாருங்கள். நாளுக்குநாள் மனக்குழப்பம் அதிகரிக்குமேயல்லாமல் அவர்கள் நிம்மதி அடையார்கள். அவர்களுக்கு நெறிகாட்டுங் கருவியொன்று தேவை.

நீங்களே அக்கருவிகளாய் இருக்கவேண்டும். வடக்கைக் காட்டும் ஊசிபோன்று தங்கள் சீவியத்தை நிரைப்படுத்தத் தெரியாதவர்களுக்கு எல்லாவற்றையும் தேவமகிமைக்காகச் செய்யும்படி காட்டுவது நீங்களேயாக வேண்டும்.

உங்கள் உத்தம மாதிரிகையைக் காண்பவர் எல்லோரும் சீவியத்தின்நெறி ஏதென்று அறிந்துகொள்ளக் கூடியதாயிருக்க வேண்டும். சகோதரங்களே! வடக்கைக்காட்டும் ஊசிகள் உலகத்திற்கு அநேகம் தேவை. சுபாவத்துக்கு மேலான நெறியை அறிவதுதான் அத்தியாவசியம். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## திருப்பலி

### நன்மையுடன் திருப்பலி

அண்மையிலே வத்திக்கான் தபாற்கந்தோரில் உள்ள விகிதர் ஒருவர் பழைய ஊத்தைக் கடுதாசியால் சுற்றிக் கட்டியிருந்த பார்சல் ஒன்றைக் கண்டார். அது 12-ம் பத்திநாத பாப்பரசருக்கு விலாசமிட்டிருந்தது. அதைத் திறந்து பார்த்தார். ஓர்கண்ணாடிக் கிண்ணமும், தட்டையான தகரப் பெட்டியும், மாலையாகக் கோர்த்த பிசைந்த அப்பத் துண்டுகளு மிருந்தன. அத்துடன் பரிசுத்த ஸ்தானத்தின் மட்டில் விசுவாச பிரமாணிக்கத்தைக் கூறும் செய்திஎழுதிய ஓர்பழைய துணியு மிருந்தது. சைபீரியாவிலே ஓரிடத்தில் ருஷியகாவல்முகாமி லிருக்கும் ஓர் குருவானவர் அதைப் பாப்பாண்டவருக்கு அனுப்பி யிருந்தார். அக்கண்ணாடிக் கிண்ணம் அந்தக் குருவானவர் உபயோகித்த பூசைப்பாத்திரம். தகரப்பெட்டி "பத்தேனைத் தட்டு." கோர்வையாயிருந்த பிசைந்த அப்பத்துண்டுகள் அவருடைய செபமாலை. அப்பார்சல் ருஷியாவிலிருந்து இரும்புத்திரையைக் கடந்துவர அக்குருவானவரின் நண்பன் ஒருவன் உதவிபுரிந்தான்.

எவருமறியாமல் இறக்கும் தருவாயிலிருந்த அக்குருவானவா இக்கண்ணீர்க் கணவாயில் கஷ்டப்படும் கிறீஸ்தவனுக்கோர் குறிப்பாகிறார். பூசையின் பலிப்பொருளாகிய கிறீஸ்து எமதுசீவியமும், பலமுமாயி க்கிறார். இதைத்தான் சம்பாவிலு, "எனக்குச் சீவிப்பதென்றால் கிறீஸ்து; கிறீஸ்துவுடன நானும் சிலுவையில அறையப்பட் டிருக்கிறேன்" என்றார். பூசையில் நன்மை உட்கொண்டதால காவல் முகாமிலிருந்த அக்குருவானவர் தமது பளுவான சிலுவையைத் தைரியத்துடன் சுமந்தார். கிறீஸ்துவைப்போல, "என் சித்தப்படியல்ல, உமது திருவுளப்படியே ஆகட்டு" மென்று அக்கசப்பான பாத்திரத்தைக் கடைசித் துளிவரையுங் குடித்தார். பலியில் பங்குகொள்வதன் மூலம் — அதாவது சற்பிரசாதத்தின் மூலம் யேசு தமதுவரங்களை நமக்கு அருளுகிறார். ஒவ்வொருநாளும் பூசையிலே சற்பிரசாதம் உட்கொள்ளும்படி "வருந்திச் சுமைசுமக்கிறவர்களே நம்மிடம் வாருங்கள்; உங்களுக்கு ஆறுதல் அளிப்போம்" என்றுகூறி யேசு நம்மை அழைக்கிறார்.

பூசையும், நன்மை உட்கொள்ளுதலும் இரண்டு வேறான கிருத்தியங்கள் அல்ல; ஒரேகிருத்தியந்தான். கல்வாரியில் பலியான [illegible]

பூசையில் பூலோகத்திலுள்ள திருச்சபையுடன் சேர்ந்து பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறோம். இதில் எம்மையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், பூசை முழுக் கிறீஸ்துவும் அதாவது — ஞானத்தலையும், உடலுஞ் சேர்ந்துசெய்யும் கிருத்தியம். கிறீஸ்துவுடன் சேர்ந்து கிறீஸ்துமூலமாய் நமது பலியை ஒப்புக் கொடுக்கும்போது, நாமும் அப்பலிப்பொருளுடன் ஒன்றுகிறோம்.

பூசை செய்யும்போது உங்கள் இன்பதுன்பங்களையும், நயநஷ்டங்களையும், வெற்றிதோல்விகளையும் யேசுவின் அளவில்லாத பலியுடன் சேர்த்துப் பலிபீடத்திற் பரமபிதாவுக்குக் காணிக்கையாக்குங்கள். சகலத்தையுஞ் சர்வேசுரனுக்கே கையளித்து நாளாந்த துன்பதுரிதங்களை யேசுவின் நேசத்துக்காகவும், அவருடைய இருதய உணர்ச்சிகளுடன் சேர்த்தும் ஏற்றுக் கொள்ளுங்கள். பிதாவின் மட்டிலும், பிறர்மட்டிலும் எல்லையற்றநேசம், தணியாத ஆத்துமவாஞ்சை, அவருடைய சித்தத்திற்குப் பூரணபணிவு இவைகளிருந்தால் உங்கள் காணிக்கை தேவனுக்கு அதிகஉவப்பை உண்டு பண்ணும்.

பூசையில் நடுநாயகமாக விளங்குவது தேவவசீகரம். ஆனால், பூசை அத்துடன் நின்றுவிட்டால் அது பூரணமடையாது. சற்பிரசாதம் பலியின்பலன். யேசுவுடன் நீ உன்னை அவருக்குக் கொடுத்தாய்

சற்பிரசாதம் கடவுளின் கைம்மாறு, பதிற்கொடை. கிறீஸ்துவின்மூலம் உன் கொடையை ஏற்றுக்கொண்டு கிறீஸ்துவின்மூலம் தம்மை உனக்குத் தருகிறது தான் சற்பிரசாதம். தேவவசீகரத்தில் தேவனுக்குத் தகுந்தகொடையாக — உன் உத்தமகொடையாக அவருடைய பிரியகுமாரனைக் கையளித்தாய். நற்கருணைவழியாய்ச் சர்வேசுரன் தமது திறமான கொடையை உனக்குத் தருகிறார். அதை வெறுக்கலாமா? பூசையில நற்கருணை உட்கொள்ளாமல விடுவது தேவகொடையை வெறுப்பது தானே.

திவ்வியபூசையில் நன்மைஉட்கொள்வது பலியைப் பூரணப்படுத்தும். உன் பலியைப் பூரணமாக்க நீ நற்கருணை உட்கொள்ள வேண்டும். "உனக்காகக் கையளிக்கப்படும் என் சரீரம் இது ...... உனக்காகச் சிந்தும் என் இரத்தம் இது" என்று திருஇரட்சகர் கூறினார். ஆகையால், இந்தப்பலி உனக்குப் பலனாக வேண்டுமாகில் நற்கருணையில் வீற்றிருக்கும் கிறீஸ்துவை நீ உட்கொள்ள வேண்டும் ஆகையால், அதிகபலனுள்ள விதமாகப் பூசையில் பங்குபற்ற விரும்பினால் நற்கருணை உட்கொள்ளுதல் அவசியம். கிறீஸ்துநாதருடன் ஐக்கியமாகி இன்னொரு கிறீஸ்துவாக மாறவிரும்பினால் நற்கருணையே அதற்கு நிச்சயமானவழி. சற்பிரசாதக் கிறுகி வேலியல்ல, ஓர் (பந்தி) சபை யிருத்துதல்.

## பெந்தெக்கோஸ்துவின் பின் 10-ம் ஞாயிறு

### நிருபம், I கோரிந். 12 : 2-11

கொரிந்தியருக்குள் பிரிவுகள்பல உண்டாயின. அக்காலத்தில் திவ்விய ஆவியானவர் பல புதுமைவரங்களைக் கிறீஸ்துவர்களுக்குக் கொடுத்தார். இதுவே அவர்களிடையில் பிரிவுஉண்டாவதற்குக் காரணமாயிருந்தது. அவைகளைவிட்டு ஒற்றுமையாகும்படி சம்பாவிலு நியாயங் கூறுகிறார்.

நீங்கள் அஞ்ஞானத்திலிருந்த பொழுது புதினமறிவதற்கோ, வழக்கத்தினாலோ, பிசாசின் ஏமாற்றத்தினாலோ வாய்பேசாத சிலைகளிடஞ் சென்றீர்கள். (2) தேவதயவினால் மனந்திரும்பி மெய்யான தேவனைத் தொழுதுவருகிறீர்கள். எந்தமனிதனாவது "யேசு ஆண்டவர்" என்றுசொன்னால் அவனுக்குப் பரிசுத்தஆவியின் ஏவுதல் கிடைத்திருக்கிறதென்றும், "யேசு சபிக்கப்பட்டவர்" என்று ஒருவன்கூறினால் அவன் பொய்ப்போதகன், கள்ளத்தீர்க்கதரிசியென்றும் அறியலாம். பின்கூறப்பட்டவர்களைப் போலிருந்த கொரிந்தியர் இப்பொழுது தேவதயவு பெற்றுத் தேவஆவியின் ஏவுதலையும் பெற்றிருக்கிறார்கள்.

பரிசுத்தஆவி உங்களுக்குப் பலவரங்களைத் தந்திருக்கிறார். விசுவாசசத்தியத்தை விளக்குதல், ஒழுக்கமுறைகளை வியாக்கியானஞ்செய்தல், புதுமைசெய்யும் விசுவாசம், சரீரவருத்தத்தை மாற்றுதல், மரித்தோரை உயிர்ப்பிப்பது போன்றவரங்கள், தேவஅறிவித்தல்களை விளக்குதல், பலபாஷைகள்பேசும் வரம், அப்பாஷைகளில் கூறப்பட்டதை மொழிபெயர்க்கும்வரம், வரங்களைக் கண்டறிதல் முதலிய பலவரங்களுண்டு.

இவைகள் உங்களுக்குள் பிரிவுகள் உண்டாவதற்குக் காரணமாகப்படாது. ஏன்? ஏனெனில், பலகொடைகளும், திறமைகளும், வரங்களு மிருந்தாலும் இவைகளுக்குக் காரணமானவர் ஒரே பரிசுத்தஆவி. திருச்சபையில் பல ஊழியங்களுண்டு. ஆனால், எசமானர் ஏகதேவன். பலவிதபுதுமைகள் நடந்தாலும், அவைகளை நடத்துகிறவர் ஒரேகடவுள்.

மேலும் இவையெல்லாம் திருச்சபையின் உபயோகத்துக்கும், வளர்ச்சிக்குமல்லாமல் பிரிவுக்கும், விரோதத்திற்குமல்ல. வரங்கிடைத்தவர்கள் கிடையாதவர்களை இகழவேண்டியதில்லை. கிடையாதவர்கள் உள்ளவர்களைப் பார்த்து எரிச்சல் கொள்ளத் தேவையில்லை. எல்லோரும் ஒரே திருச்சபைக்காகவே பாடுபடுகிறார்கள்.

மேலும் இக்கொடைகளைக் கொடுக்கிற பரிசுத்தஆவியானவர் தமது இஷ்டப்படியே அவைகளைக் கொடுக்கிறார். எவராவது அவைகளைப்பற்றி உரிமை பாராட்ட இடமில்லை.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கோணம்

திரிகோணமலை

வண. ஞானப்பிதாவே,

1960-ம்ஆண்டுக்கு நாம் அதிக தூரமில்லை. பாத்திமாதாயார் லூசியென்பவளுக்கு வெளிப்படுத்திய இரகசியமொன்று அவ்வாண்டில் வெளிப்படுத்தப் படுமென்று சொல்லுகிறார்கள். இதன் உண்மை பொய்யையும், கனத்தையும்பற்றிச் சற்று விளக்குவீர்களா?

S. M. A.

விடை: 1917-ம் ஆண்டு பாத்திமாவிலே தேவதாயார் காட்சியளித்து, நாம் தேவகோபத்தைத் தடுக்கவேண்டுமாயின் செபமும், தபமும் செய்ய வேண்டுமென எச்சரிக்கை விடுக்கலாயினு. இந்தஎச்சரிக்கையை மனுக்குலத்தோர் அதிகம் கவனிக்கவில்லை. அவ கொடுத்தருளிய அடையாளங்களோ ஒன்றின்பின் ஒன்றாய்ப் பலித்து வருவதை நாம் காண்கிறோம். 1917-ம் ஆண்டின் ஆடிமாசத்தில் அருளியகாட்சியின்போது, தாம் ஐப்பசிமாசத்திலே பெரிய அடையாளமொன்றைக் காண்பிப்பதாகப் பண்ணியவாக்கு அப்படியே ஐப்பசிமாதத்தில் சூரியன் நிலைதவறி விழுகின்றகாட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த 50,000 சனங்கள்முன்பாக நிறைவேறலாயிற்று. வடதிசையிலே பிரமாண்டமான நவீனவெளிச்சமொன்று தோன்றினல், அது ஓர் பயங்கர யுத்தத்திற்கு அடையாளமெனப் பண்ணியவாக்கு, 1938-ம் ஆண்டு தைமாசம் 24-ம், 25-ம் திகதிகளில் நிறைவேறிற்று. அதன்பின் பங்குனி 11-ந் திகதியன்று ஹிற்லர் என்பவன் இரண்டாவது உலக மகாயுத்தத்தை ஆரம்பித்தான் என்பதை அறிவோம்.

இன்னுமோர் மூன்றும் இரகசியம் வெளிப்படுத்தப்பட இருக்கிறது. இது லூசியாவின்கரங்களினுல் எழுதப்பட்டு லெயிறியாநகர் மேற்றிராணியாரின் வசம் ஒப்பிக்கப்பட்டிருக்கிறது என்பது மெய்தான். 1960-ம் ஆண்டில் அது வெளிப்படுத்தப்படும். இது என்னவாய் இருக்குமோஎன்று பயப்படுகிறதற்கு இடமுண்டு. மனுஷர் தேவவழியின்படி நடக்கத் தொடங்காவிட்டால்—செபத்தினதும், தபத்தினதும்பாதையைக் கையாடாவிட்டால் இந்தஇரகசியமானது வரவிருக்கும் மகாபயங்கர மூன்ருவது உலகயுத்தத்தைக் குறித்துக் காட்டிக்கொண்டு நின்ருலும்நிற்கலாம்.

"கண்ணிருந்தும் கண்ணில்லாதவர்கள் போலும், காதிருந்தும் காதில்லாதவர்கள் போலும்" நடவாதிருப்போமாக!

Sacred Heart College, Karaveddy

## மொழிபெயர்ப்புப் போட்டி

## ROAD SAFETY LESSONS—III

Don't cross behind a standing lorry;

If you do you may be sorry.

The lorry blocks a driver's view;

You can't see him; he can't see you.

நீதிபதி — (மோட்டர் சாரதியைநோக்கி) நீ உனது காரைக் கண்டபடியே அதிகம் வேகமாய்ச் செலுத்தியிருக்கிருய்; அதனுல் உனது லைசென்சை நீக்கிவிடப்போகிறேன்.

சாரதி — சர், எனக்குத் தானே லைசென்ஸ் கிடையாதே.

## கல்லூரி விளையாட்டுப் போட்டி

வடமத்தியமாகாணத்திலே கடந்த ஐம்பதுஆண்டுகளாக அனுராதபுரம், சஞ்சூசையப்பர்கல்லூரி கலந்துகொண்ட எந்தவிளையாட்டுப்போட்டியும் இம்மாகாணத்து மக்கள்மனதை அதிகமாகக் கவர்ந்துகொண்டே வந்திருக்கக்காரணம், அக்கல்லூரிஅடைந்திருக்கும் சிறப்பேயாகும். தற்போது இக்கல்லூரித் தலைவராகஇருந்துவரும் வண. எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ், பி. ஏ. சுவாமியவர்கள் இந்தஉண்மையைப் பெருந்தொகையான பாடசாலைகள் கலந்துகொண்ட பெரும்போட்டிஒன்றிலே நிரூபித்திருக்கிறுர்

இக்கல்லூரி விளையாட்டுப்போட்டிகள் கடந்தமூன்றுஆண்டுகளாக இம்மாகாணப் பொதுமக்களின் பாராட்டுதலை அதிகமாகப் பெற்றுள்ளதென்பதற்குப் பெருந்திரளாகஅவர்கள் சமுகமளித்தமையே போந்த சான்றாகும். சென்ற 23-7-55 சனிவாரமன்று இக்கல்லூரிப் பழையமாணவரும், மதவாச்சிப் பிரதிநிதியுமான திரு. மைத்திரிபாலா சேனநாயகஅவர்கள் கல்லூரி விளையாட்டுப்போட்டியை ஆரம்பித்துவைத்தார்.

1-30 மணிக்குப் போட்டிகள் ஆரம்பமாகிப் பழமைக்குப் புதுமையளித்த பலஆட்டங்களிலே மிகச்சிறந்த சைக்கிள்மரதன்ஓட்டம் அர்ச். சூசையப்பர் ஆலயமைதானத்திலிருந்து ஆரம்பமாயிற்று. கல்லூரித்தலைவரின் ஆசிபெற்றுத் தீப்பந்தமும், கல்லூரிச்சின்னமும் முறைமுறையாக இருமாணவர்களால் ஓட்டமாக எட்டுமைல்தூரத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இக்காட்சி எவ்வளவோ இன்பகாட்சியாயிற்று. நகரகாவலரின் மோட்டர்ரதம் முன்சென்று மக்களை ஒழுங்குபடுத்திச்செல்ல, அதைத்தொடர்ந்து கல்லூரிக்கொடி தாங்கியஓர்வாகனமும், இதைத்தொடர்ந்து பக்கம்ஒன்றுக்கு இருபதாக மொத்தம்நாற்பது கல்லூரித்துவசங்கள் பூட்டப்பட்டு மாணவர்களால் கிரமமாகச் செலுத்தப்பெற்ற துவிச்சக்கரவண்டிகளும்செல்ல, இவற்றைத்தொடர்ந்து முறையே கல்லூரிச்சின்னத்தையும், தீப்பந்தத்தையும் இருமாணவர் தாங்கியவண்ணம்ஓட, இவர்களைத்தொடர்ந்து ஓர்மோட்டர்ரதமும், நான்குதுவிச்சக்கர மோட்டர்வண்டிகளும், ஈற்றில் உடன்சிகிச்சை வாகனமும், மாணவர்களை அவரவர் ஓட்டம் முடிந்தபின் ஏற்றிச்செல்லும் ரதமும் செல்ல, இந்தக்காட்சி எல்லோர்கவனத்தையுமீர்ந்ததோடமையாது யாவரும் கல்லூரியின் சிறப்பையும், அதன் நடப்பையும்பற்றிப் பெருமையாகப் பேசவுஞ்செய்தது.

பவனி பொதுமைதானத்தை அண்மியதும், பிரதமவிருந்தாடியான மதவாச்சிப் பிரதிநிதிஅவர்கள் விழாவை ஆரம்பித்துவைக்க, கல்லூரிக் கொடியேற்றுவைபவம், கழகங்களின் அணிவகுப்பு, துவசவணக்கம் முதலியனவும், கல்லூரித்தலைவரின் ஆரம்பவிழாச்சிற்றுரையும் வழமையிலும சிறப்பாக நடைபெற்றன. பின்னர்நடைபெற்ற பலவகையான நவீனபோட்டிகளிலே தலையணைச்சண்டை, தடியூன்றிப்பாய்தல், சிறுவரின் சப்பாத்துத்தெரிதல் முதலியன கவர்ச்சிகரமாயிருந்தன. போட்டிகளின்முடிவிலே வெள்ளிக்கிண்ணங்களும், கேடயங்களும் பிரதமவிருந்தாடியால் வழங்கபபட்டன. தமதுமுடிவுரையிலே அவர் கல்லூரித்தலைவரின் திறமையைவியந்து, அதனுல் நாளொருவண்ணமாகக் கல்லூரியின் வளர்ச்சி அதிகரிப்பதைப் புகழ்ந்து கொண்டார். கல்லூரித்தலைவரின் அயரா உழைப்பினுல் பழையமாணவரும் போட்டிகளில் கலந்துகொண்டனர். பொதுமைதானம்முழுவதும் நான்கு கழகங்களாலும், பழையமாணவராலும், கல்லூரித்தலைவராலும் அமைக்கப்பட்டிருந்தபந்தர்கள் நாற்றிசையிலும் பரந்திருந்த [illegible] தூரமான [illegible] குழுமிய ஆயிரக்கணக்கான மக்களால் தேங்கியிருந்ததிலிருந்து போட்டிகளின்சிறப்பு பெருமைபாராட்டத் தக்கதாயிருந்தது.

— நிருபர்

## "யுத்தம் வராது; ஆனல்……"

"ஜெனிவாவில் நான்குவல்லரசுகளின் தலைவர்கள்மகாநாடு வெற்றிகரமாக முடிந்தது" என்று மேற்குநாடுகளும், ருஷியாவுஞ்சேர்ந்து பாடும்பொழுது, ஏதோஒருபெரியயுகம் உதித்திருப்பதாகத் தோன்றும. ஆனல், அதுதான் இல்லை. ஜெனிவாவிலே திட்டமான முடிவுகள்எதுவும ஏற்படவில்லை. ஏற்பட்டிருந்தால் அமெரிக்க, பிரித்தானிய தலைவர்கள் "யுத்தம் வராது; ஆனல், படைகள் தயாராக இருக்கட்டும்" என்ற முறையில் பேசியிருக்கமாட்டார்கள். சம்பந்திகள் ஒன்றுகூடிப்பேசுவதால் சமாசமும்ஏற்படலாம். ஏலவே, தொடக்கத்தில் இருந்தமனஸ்தாபமும் சிலவேளை அதிகரிக்கலாம். நல்லவேளையாகப் பின்னர்கூறியது நடக்கவில்லை. ஆனல், ஜெனிவாமகாநாடு முன்னர் கூறியதேபோல், ஒரு நல்ல சூழ்நிலையை உண்டுபண்ணியிருக்கிறது. அதாவது, எரிமலையின்வாய் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறது. அது எந்தநேரமும் வெடிக்கலாம. இந்த உண்மையை நால்வர்மகாநாட்டில் கலந்துகொண்ட பிரமுகர்களே நன்கு தெரிவித்திருக்கிறுர்கள்.

* * *

ஜெனிவாவிலே நால்வர்மகாநாட்டை ஆரம்பித்துவைத்த அமெரிக்க ஜனதிபதி ஐஸன்ஹாவரும் "யுத்தமுறையை முடிவாகத் தவிர்ப்போம்; புதுமுறையில் இராசதந்திரப்பேச்சுகளை ஆரம்பிப்போம்; போர்முனை சமரசமேடையாக மாறவேண்டும" என்று பெருமிதத்துடன்பேசினுர். இந்த உந்நத நோக்கம் ஜெனிவாவிலே கைகூடவில்லை. ஜேர்மன்பிரச்சினை தீரவில்லை. ஆயுதபலங்களைக்குறைப்பதிலும் சிக்கல் ஏற்பட்டது. இந்தஇரண்டும் முடிவுபெருமலே ஐரோப்பாவில் சமாதானம் ஏற்படமுடியாது. இப்பிரச்சினைகளிலே எப்பொழுது சமரசம் ஏற்படுமென்று சொல்லுவதும் கஷ்டம். ஐப்பசியிலேகூடும நான்குவல்லரசுகளின் வெளிநாட்டுமந்திரிகள் பிரமிக்கத்தக்கஒன்றைச் சாதிப்பார்களென்று நம்புவதற்குஇடமில்லை. நான்குதலைவர்கள் ஆறுநாட்களாகப்பேசி எதையுமேசாதிக்கமுடியவில்லை. அவர்களால் புதுமுறையிலே இராசதந்திர பேச்சுகளை ஆரம்பிக்க முடியவில்லையென்றால், ஆடிமகாநாடுசெய்யாதஒன்றை ஐப்பசி மகாநாடு செய்துவிடுமென்று மனக்கோட்டைகட்ட முடியாது. ஜெனிவாவிலேநால்வர்தேனொழுகபபேசினுர்கள். அவர்களின்பின்புறத்தல் வீற்றிருந்து சூத்திரக்கயிறுகளை இழுத்த வெளிநாட்டுமந்திரிகள்தான் அடிப்படையில் வேற்றுமைகொண்டார்கள். "மறுபடியும கூடிப்பேசுவோம; அடுத்த கூட்டத்துக்கு விஷயத்தைப் பின்போடுவோம்" என்பது தோல்வியை மறைக்கும் தந்திரமாகுமேதவிர வேறொன்றுமில்லை. புது இராசதந்திரபேச்சுகள் வெற்றிபெற வேண்டுமானுல், பழைய இராசதந்திரமுறைகள் கைவிடப்பட வேண்டும். இதைச்செய்ய அமெரிக்க வெளிநாட்டுமந்திரியார் திரு. டல்லஸ் மறுத்தார். ஒற்றுமைஏற்படவில்லை.

* * *

ருஷியபிரதமர் மாஷல்புல்கானின் "மேற்குநாடுகள் நேற்றோவைக் கலைத்துவிடட்டும்; நாங்கள் வார்சோ முன்னணியைக் கலைத்துவிடுகிறோம்" என்று அறைகூவினுர். புதுமுறையிலே இராசதந்திரம் உதிக்குமாஎன்று அவர் நோட்டம்பார்த்தார். "நேற்றோவைக் கலைக்கமுடியாது" என்று மேற்குநாடுகள் பதிலளித்தன. ருஷியாவின் சமாதான ஆர்வத்திற்கு இதன்மூலம் முகத்தில் கரிபூசப்பட்டது. ஆயினும், மாஷல்புல்கானின் மற்றொருமுயற்சி செய்தார். "ஐரோப்பிய பாதுகாப்புச்சபையை ஏற்படுத்துவோம்; அதில் நேற்றோவும, வார்சோமுன்னணியும் இடம்பெறட்டு"மென்றுபிரேரணைசெய்தார். "ஜேர்மன்பிரச்சினை தீரட்டும்; இருஜேர்மனிகளும் ஐக்கியமடையட்டும்; அப்புறம் ஐரோப்பியபாதுகாப்புப்பற்றிப் பேசலாம" என்ருர்கள் திரு. டல்லசும், சேர் ஈடனும. உடனே ருஷியாவுக்கு உண்மை விளங்கிவிட்டது. மேற்குநாடுகள் தங்களது பழைய இராசதந்திரத்தைக் கைவிடவில்லைஎன்பதே அந்தஉண்மை. முதல் யுத்தத்துக்குப்பின் அமெரிக்க ஜனதிபதி வில்சன்பேசிய பெருமொழிகளைத் தோற்கடிக்கும் தாராளமுறையிலே ஐஸன்ஹாவர் ஜெனிவாவில் பேசினுர். ஆனல், வில்சனின் பதினுன்குஅம்சத் திட்டத்துக்குநேர்ந்த கதிதான் ஐஸன்ஹாவரின் புதிய இராசதந்திரத்துக்கும் ஏற்பட்டது. பழைய இராசதந்திரத்தின் யுத்ததூமகேதுக்கள்தான் "நேற்றோ" என்ற அத்திலாந்திக் சாசனநாடுகளின் கூட்டுஇராணுவபலமும், 'சீற்றோ' என்ற பசிபிக்நாடுகளின் பலமும். இவைகள் உயிரோடுஇருக்கும்வரை புதிய இராசதந்திரம் தலையெடுக்கமுடியாது. பழையயுத்தவெறி குறையாது. ஆயுதபலங்களைக் குறைப்பதும பேச்சளவில்தான் இருக்கும். "ஆயுதபலத்தைக் குறைக்கவேண்டாம்" என்பதே ஜனதிபதி ஐஸன்ஹாவர் அமெரிக்காவுக்குத் திரும்பியதும் தமதுமுப்படைகளின் சேனதிபதிகளுக்கும் விடுத்தகட்டளையாகும.

* * *

ஜெனிவாவிலே நான்குநாடுகளின் தலைவர்கள்காட்டிய மனபபான்மை நீடிக்குமானுல், ஐரோப்பியவிவகாரம் தீராது. சமாதான இராசபாதையில் நாடுகள் செல்லுமென்று எதிர்பார்க்க முடியாது. மேற்குஜேர்மனியை இராணுவநாடாக்க வேண்டுமென்பது அமெரிக்காவின் கருத்து. இதை ருஷியா முற்றுகமறுக்கிறது. இந்த இருதுருவங்களும் ஒன்றுசேருவது எப்படி? மேற்குஜேர்மனி ஆயுதமேந்துவது, பிரான்சுக்குப் பிடிக்கவில்லை. பிரான்சும், ருஷியாவும இந்த விஷயத்தில் ஏனையமேற்குநாடுகளிடமிருந்து மாறுபடுகின்றன. மேற்குஜேர்மனியின் பிரதமரான டக்றர் அடனேர்அவர்கள் அமெரிக்காவின் "கைப்பிள்ளை"யாக இருக்கும்பொழுது, அவரைருஷியா ஒருபோதும்நம்பாது. டக்றர்அடனேர் மஸ்கோவுக்குச் செல்லலாம். சமரசம பேசலாம். ஆனல், அவர் அமெரிக்காவின்கையாள் என்றநினைவை ருஷியா கைவிடாது. இதைப்போலவே, ருஷிய பிரதமர் மாஷல் புல்கானின் லண்டனுக்குச் செல்லலாம். பிரித்தானியபிரதமர் சேர் ஈடனும் மஸ்கோவுக்கு விஜயம் செய்யலாம. இந்தவிஜயங்களால் கெடுபிடியுத்தம் ஓரளவுக்குக் குறையலாமேயொழியச் சமாதானம்உதிக்காது. படைப்பலத்திலே மேற்குநாடுகளும், ருஷியாவும் நம்பிக்கை கொண்டிருக்கும்வரை சமாதானம்என்பது குதிரைக்கொம்புதான். எல்லா வல்லரசுகளினதும் ஆயுத, வெடிகுண்டுச் சாலைகள்எல்லாம் ஏராளமான புதுஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும உற்பத்திசெய்து தள்ளிக்கொண்டேதான் இருக்கும்.

● பரிசுத்த ஸ்தானத்தினிடமாக நியமனஞ்செய்யப்பெற்ற இந்தியபுதிய பிரதிநிதியான டக்றர் மோஹன் சிங்காமெற்று அவர்கள் சென்றஆடிமாதம் 5-ந் திகதியன்று வத்திக்கான் மாளிகை சென்று தமதுநியமன அதிகாரப்பத்திரங்களைப் பரிசுத்த பாப்பரசரிடம் சமர்ப்பிக்கலாயினர். இவரே சுவிற்சர்லாந்திலும், ஆஸ்திரியாவிலும் இந்தியாவின் பிரதிநிதியாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாதிகாரிக்குப் பிரிவுஉபசாரம்

கொழும்பு, வித்தியா தலைமைக் காரியாலயத்துக்கு மாற்றமாகிச்செல்லும் வடபெரும்பாக வித்தியாதிகாரி திரு. கே. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்குச் சென்ற 30-7-55 சனிக்கிழமை சாயந்தரம் கொழும்புத்துறைத்தாபன ஆசிரியகலாசாலைப் பழையமாணவர் சங்க ஆதரவிலே, அத்தாபனத்தலைவர் வண. எம். ஜே. மரியாம்பிள்ளை சுவாமியவர்கள் தலைமையில் பரிமளிப்பான ஓர் பிரிவுஉபசாரம் நடத்தப்படலாயிற்று. ஆசிரியர் ஆசிரியைகளும், மாணவர் மாணவிகளும், மற்றும் பிரபலஸ்தர்களுமாக ஐஞ்ஞூறுபேர்வரை சமுகமளித்திருந்தார்கள். மகாவந். ஜே. ஏ. இயோமார்ஆண்டவர், அதிவண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம்சுவாமியார், மத்திய கல்லூரிஅதிபர் கனம். சி. ஏ. சிமித், கனம், ஏ. எஸ். வீரகத்திப்பிள்ளைப் போதகர் ஆதியநால்வரும் பிரதம விருந்தாடிகளாயிருந்தார்கள். பல்வேறு பாடசாலைகளைச்சேர்ந்த பிள்ளைகளின் நடனமாதியன கவர்ச்சிகரமாயிருந்தன. சகலர்க்கும் சம்பிரமமான ஓர் தோட்டோபசாரனை நடத்தப்பட்டது. அவ்வேளை போதகர் வீரகத்திப்பிள்ளை, சுவாமி மதுரநாயகம், ஆசிரியர் அடைக்கலமுத்து, ஆசிரியர் சந்தியாப்பிள்ளை, பண்டிதர் யோசேப், பண்டிதர் ஆசிநாதன் என்பவர்கள் வித்தியாதிகாரியின் பாரபட்சமற்ற சேவையைப்பாராட்டிச் சொற்பொழிவாற்றினர். வித்தியாதிகாரி அளித்த பதிலிலே, "எனது பதவிகாலத்தில் எல்லாப் பாடசாலைகளையும் நீதிப்படியும், பிரமாணப்படியும் பாரபட்சமின்றி ஒரேவிதமாகவே நிர்வகித்துவந்திருக்கிறேன்; நீதியாக நடப்பவர்களைக் கௌரவிப்பது கத்தோலிக்கமுகாமையின் பாரம்பரிய சிறப்பியல்பு; அவர்களுக்கு எவ்வித சலுகையும் நான் காட்டவில்லை" எனக்கூறித் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுஉபசாரத்திற்காக நன்றிதெரிவித்தார். காரியதரிசியின் நன்றியுரையுடன் பிரிவுஉபசார வைபவம் இனிதே நிறைவேறியது.

— நிருபர்

---

புத்தக மதிப்புரை

## புதுமுறைப் பூகோளம்

### முதலாம் பாகம்

ஆக்கியோன்: திரு. சி. பொன்னம்பலம், அரியாலை.

பிரசுரம்: சுந்தரம் பிரசுராலயம், 'அருளகம்', அரியாலை.

விலை: ரூபா 2-00

'புதுமுறைப்பூகோளம்' என்ற பெயருடன் வெளிவந்துள்ள இந்நூலில் இலங்கையையும், இந்துசமுத்திரத்தைச் சூழவுள்ள கண்டங்களையும்பற்றிய பூமிசாத்திரவிடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. இஃது ஆறாம்வகுப்புக்கென அரசினர்அமைத்துள்ள புதிய பாடத்திட்டத்தைத் தழுவியதாய் அமைந்துள்ளது. புதியபோதனாமுறைகளை அநுசரித்துத் தேசப்படங்கள், சித்திரவிளக்கங்கள், அட்டவணைகள், பயிற்சி அப்பியாசங்கள் என்பனவற்றுடன் திகழ்கின்றது. மக்களின் வாழ்க்கைமுறை இடத்துக்கிடம் மாறுபடுவதற்குப் பூமிசாத்திரஏதுக்கள் எவ்வாறு துணைபுரிகின்றன என்பதை மாணவர் நன்கு கிரகித்துக்கொள்ளத் தக்கமுறையில் விளக்கங்கள் அமைந்துள்ளன.

சுயமொழிமூலம் கல்வி போதிக்கப்படவேண்டும் என வற்புறுத்தப்பட்டுவரும் இந்நாளில் நம்தமிழ்மொழியிலும் பலவகையான பாடநூல்கள் இருப்பது விரும்பத்தக்கதே. எனவே, ஆக்கியோனின் இவ்வரும்பணியைக் கல்விஉலகம் உவந்தேற்கு மென்பதற்கெட்டுணையும் ஐயமில்லை.

எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

## குரவர் சுபதினம்

பொகவந்தலாவப் பரிசுத்த செபமாலை அன்னையின்கோவில் கட்டளைக் குரவர் வண. விக்றர்இராசநாயகம்சுவாமிகள் பெயர்பூண்ட பெருநாட்சுபதினம் இவ்வூர்ப்பாடசாலை ஆசிரியர், மாணவர்களாலே கொண்டாடப்படலாயிற்று. 27-ந் திகதி சாயந்தரம் அவர்கள் வண. சுவாமியாரைச்சந்தித்துப் பெருநாள்சோபனம் கூறிநின்றார்கள். மறுநாட்காலை 7மணிக்குக் குரவர்அவர்களால் பாட்டுப்பூசை நிறைவேறியது. பின்னர் காலை 10மணியளவில் ஆசிரியரும், மாணவர்களும் வரிசையாகச்சென்று மாலைஇட்டு அவரை வரவேற்றுப் புதிதாகக்கட்டிய பாடசாலைமண்டபத்திற்கு அழைத்துவந்ததும், அவர் சமயோசிதமாகச் சிலபேசிப் புதியபாடசாலையைத் திறந்து பாவனைக்குவைத்தார். பின்னர் பக்கவாத்தியங்களுடன் பாலரும், பாலகிகளும் குயிலினுமினிய குரலோடு சோபன கீதங்களைப் பலநிகழ்ச்சிகளிடையே பாடி அவரைப் புகழ்ந்தேற்றினர். செல்வி திரேஸ்என்ற மாணவியால் வாழ்த்துப்பத்திரம் படித்துஅளிக்கப்பட்டது. ஆசிரியர் எஸ். எஸ். சந்தியாசில்வா, ஆசிரியர் ஏ. லூயிஸ் குரூஸ், தலைமைஆசிரியர் ஜே. சி. எம். கோமஸ் என்பவர்கள் சுவாமியாரின் அரும்பெருஞ்சேவைகளையும், குணநலன்களையும் பாராட்டிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். தலைமைஆசிரியர் உபசாரப்பொருட்களும், ஓர்பணமுடிப்பும் வழங்கினர். ஈற்றில் குரவர்எழுந்து எல்லோருக்கும் நன்றிகூறித் தமது அன்பின் ஆசியை அருளினர். அதன்மேல் யாவர்க்குஞ் சிற்றுண்டிவகைகள் பரிமாறப்பட்டுப் பெருநாள் இனிதே முடிவுற்றது.

மாணவன்

---

## சனசமுகநிலையம்

### நாவாந்துறை

நாவாந்துறை, சென்மேரீஸ் சனசமுகநிலையத்தின் ஆறுவதுஆண்டுத் தெரிவுகூட்டம் நிலையமண்டபத்தில் புலவர் கி. சூசைப்பிள்ளை அவர்கள்தலைமையில் சென்ற 31-7-55 ஞாயிற்றுக்கிழமை நடந்தேறியது. காரியதரிசியால்சென்றகூட்டஅறிக்கையும், தனாதிகாரியால் வரவு செலவுக்கணக்கும் வாசிக்கப்பட்டுச் சபையோரால் ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப் பட்டது. அதன்பின் திருவாளர்கள்: ம. ஆசீர்வாதம், ச. ஞானப்பிரகாசம், நீ. ஆசீர்வாதம்என்போர் சொற்பொழிவுநிகழ்த்தியதும், மாணவர் தொ. மரியதாஸ் மகிழ்ச்சியூட்டும் இனியகீதங்கள்படித்தார். பின்னர் தேர்தல் நடைபெற்றது. புலவர் கி. சூசைப்பிள்ளை தலைவராகவும், மாணவன சூ. அமிர்தநாதர் காரியதரிசியாகவும், திரு. நீ. ஆசீர்வாதம் தனாதிகாரியாகவும், திருவாளர்கள்: நீ. தொபியாஸ், தொ. அந்தோனிப்பிள்ளை, கி. மருசலீன், கி. நீக்கிலாப்பிள்ளை, வ. அருளப்பு, ச. ஞானப்பிரகாசம், மாணவர்கள்: வி. பிரான்சீஸ், ம. மனுவல்பிள்ளை, செ. மிக்கல்தாஸ், நீ. அருளானந்தம் என்பவர்கள் நிர்வாகசபை அங்கத்தவராகவுந் தெரியப்பட்டார்கள்.

காரியதரிசி

---



### நன்றியறிந்த தோத்திரம்

இரக்கம் நிறைந்த சதாசகாய மாதாவே! நான் மிகவும் வருத்தமாய் இருந்தபோது உமது இரக்கத்தைக் கெஞ்சிமன்றாடினேன். உமது அளவுகடந்த சலுகையால் நான் சுகமடைந்து வருகிறேன். எனதுவருத்தம் பூரணசுகம் அடையும்படி உமது இரக்கத்தை மீண்டும் கெஞ்சி மன்றாடுகிறேன்.

யாழ்ப்பாணம். ... இ.

### நன்றியறிந்த தோத்திரம்

எனதுகுழந்தைக்குத் திடீரெனஏற்பட்டுள்ள கடுமையானவியாதி வைத்தியரினால் கைவிடப்பட்டபோதிலும், பரிசுத்த சதாசகாய மாதாவினதும், அர்ச். சூசையப்பர், பிரான்சீஸ் சவேரியார், செபஸ்தியார் இவர்களினதும் மன்றாட்டினால் எனது குழந்தைக்குப் பூரணசுகம் கிடைத்துள்ளது. அவர்களின் புகழ்ச்சிக்காகவும், எனது நேர்த்திக்கடனுக்காகவும் இதைப் பிரசுரிக்கிறேன். சதாசகாய மாதாவின் நாமம் புகழப்படுவதாக.

எம். எம். பெரேரா

பள்ளிமுனை

---

## பரதகுலத்தவர் கொண்டாடும் பனிமயமாதா திருவிழா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துன்புறுத்தத்தொடங்கினர். திருவாங்கூரின் அநேகபகுதிகளிலும், கொச்சியிலும், கரையோரப்பகுதிகளிலும் கத்தோலிக்கர்மீது கொடிய அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்டனர். ஒல்லாந்தரின் அடக்குமுறை உச்சநிலையை அடைந்தபோது, அர்ச். பாவிலுவானவர் ஆலயம் தரைமட்டமாக்கப்பட்டது. ஆனால், தெய்வாதீனமாகப் பனிமயமாதாவின் திருச்சுரூபம ஒல்லாந்தர் கையில் சிக்கவில்லை. பரதர்கள் அதை உட்பகுதியிலுள்ள ஒருபாதுகாப்பான இடத்துக்குக் கொண்டுபோய்விட்டனர். ஒல்லாந்தரின் நாசச்செயலிலிருந்து காப்பாற்றுவதற்காக அது செவந்தகுளம், செந்தாவங்குளம், கொற்கைமுதலான இடங்கள்வழியாகக் கிராமத்துக்குக்கிராமம் கொண்டுபோகப்பட்டது.

ஆக்கிரமிப்பாளர் பனிமயமாதாவின் சுரூபத்துக்குத் தீங்கிழைக்க முயன்றார்களெனினும் அவர்களின் முயற்சிகள்விழலாயின. பரதர்களின் உறுதியான விசுவாசத்தைக் குலைப்பதிலும் ஒல்லாந்தர் வெற்றிபெறவில்லை.

(தொடரும்)

---

## மட்டக்களப்பு, கத்தோலிக்க கிளப்

மேற்படிகிளப்பின் 23-வதுஆண்டுப் பொதுக்கூட்டம் சென்ற 23-7-55 சனிக்கிழமை திரு. ஜே. எல். திசைவீரசிங்கம் அவர்கள்தலைமையில் நடந்தேறியது. வருடாந்தஅறிக்கையும், கடந்தவருடத்துக் கணக்கு விபரமும் சமர்ப்பிக்கப்பட்டதன்மேல் பின்வரும் புதுஉத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அக்கிராசனர்: திரு. பி. சவிரிமுத்து. உபஅக்கிராசனகள்: திரு. ஜே. எல். திசைவீரசிங்கம், திரு. ஏ. அழகையா. காரியதரிசி: திரு. ஏ. பிரான்சீஸ். உதவிக்காரியதரிசி: திரு. ஜே. ஜி. பி. பொன்னையா. தனாதிகாரி: திரு. கே. தியாகராஜா. நிர்வாகசபை அங்கத்தினராகப் பின்வருபவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். திருவாளர்கள்: பி. ஜீ. ஜோர்ஜ், எஸ். கிறிசோஸ்தம், டபிள்யு. ஆர். ஜே. கனகசபை, எவ். எக்ஸ். மாட்டீன், ஏ. வீ. ஒக்கேஸ். புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அக்கிராசனர் பேசுகையில்: கிளப்முன்னிலையடைவதற்கு அங்கத்தவர்களின் விடாமுயற்சியும், ஒத்துழைப்பும் அதிகம் வேண்டுமெனக் குறிப்பிட்டார். கிளப்பின் ஞானத்தலைவராகிய வண. எல். ஓ. தம்பிமுத்துச்சுவாமியவர்கள் அதுதழைப்பதற்கு அங்கத்தவரிடையே நலலெண்ணமும், சுயநலமற்றமுயற்சியும் காணப்படவேண்டுமென வற்புறுத்தினர். கிளப்பின் நோக்கங்களையும், இலட்சியங்களையும் உணர்ந்து அவன செய்யவேண்டியது அங்கத்தவரின் பொறுப்பென்றும், தாம் அதிகாரியென்ற முறையில்அல்ல, ஆனல், ஒரு வழிகாட்டிபோலவும், ஒரு நண்பன் போலவும்உதவிபுரிய ஆயத்தமாயிருப்பதாகவும் கூறினர்.

—நிருபர்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 69

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் கரையூர் சாமுவேல் மிக்கேல்.

வழக்காளி

எதிராக

1. கரையூர் அருளானந்தம்' கிறிஸ்ரோபரும்,
2. ஷை பெண் அன்னம்மாவும்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 69-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955-ம் ஆவ புரட்டாதி மீ 8-ந் உ வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப்பகுதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக், சுண்டிக்குளிச் கோயிற்பற்று கரையூரிறை, தீயோகு வளவும், அரியதுரையன தறையும், அரியகுட்டியிருப்பும். $2\frac{5}{8}$ நிலப்பரப்பு. வீடும், செய்பயிரும், மற்றும் பிரயோசனங்களும். எல்லை - கிழக்கு: சந்தியாகு சவிரியானுக்கும், வயித்தி சலோமனுக்குமுடையவாதனங்கள். வடக்கு: ஒழுங்கை. மேற்கு: சுவாம்பிள்ளை செல்லையாவுக்கும், வெடலிஸ்வுக்கும், பங்காளருக்குமுடையவாதனங்கள். தெற்கு: பிருஞ்சிஸ்கா சந்தியாகுவுக்குமுடையவாதனம். இந்தஎல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் $\frac{7}{32}$ பங்கும். ஆனல், சிமியோன் சுவக்கினுக்கும். பெண் பிரகாசிக்குமுடைய சீவிய உரித்துப் புறநீங்கலாக.

இக்காணியைப்பற்றி வேறுவிபரமறிய விரும்பின் கனம்தங்கிய புறக்றர், யாழ்ப்பாணம், 2-ம் குறுக்குத்தெரு, இல. 8. T. அரியநாயகம் அவர்களிடம் அறியலாம்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

26-7-55

---

● இந்தியாவிலே முற்றுகக்குருடர்களாய், அல்லது அரைக்குருடர்களாகச் சுமார் 50லட்சம்பேர் இருந்துவருகிறார்களென்று கல்கத்தாவிலே றேட்டறிகிளப் கூட்டத்தில் சுகாதாரப்பகுதித்தலைவர் பேசியபோது தெரிவித்திருக்கின்றார். ஆகவே, இத்துறையில் இந்தியா இரண்டாவது ஸ்தானம்வகித்திருக்கிறது. முதல்ஸ்தானம் வகித்திருப்பது எகிப்தாகும்.

● யேசுசபையை அடியிட்டவரான அர்ச். லொயலா இஞ்ஞாசியார் பரமபதமடைந்த 400-ம் ஆண்டு நிறைவுவிழா அடுத்துநிகழும 1956-ம் ஆண்டு ஆடிமாதம் வருகின்றது. அதனைக் கொண்டாடுதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு ஸ்பானிய நீதிப்பரிபாலன மந்திரியார் இருகம்மிற்றிகளை நியமித்திருக்கின்றார்.

---

## GOVT. NOTICE

### Forest Dept.

N2253—32 lots of Satin, Ranai & Palu logs and 3 Palu Piles will be sold by Public Auction at the Timber Depot., Point Pedro by the D. F. O., N. D., Jaffna on 19-8-55 commencing at 9 a.m. Intending purchasers are requested to acquaint themselves with the special conditions governing the sale which are available with the Depot Keeper, Point Pedro, where the timber can be inspected by arrangement.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, [illegible] Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 4 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org